Registered as a Newspaper
பக்கங்கள் 24 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 36

திங்கட்கிழமை
01 ஜனவரி 2024

மார்கழி 16 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2054

**முச்சந்தி முரளி**



"நல்லதா நம்பிக்கை தாறமாதிரி இந்த வருசமாவது எங்களுக்கு மாறோணும் பாருங்கோ"






படம் :- ஐ.சிவசாந்தன்

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் புத்தாண்டை வரவேற்கும் முகமாக தீபங்கள் ஏற்றப்பட்டன.



யாழ்ப்பாணம் மரியன்னை தேவாலயத்தில் நேற்று நள்ளிரவு இடம்பெற்ற புத்தாண்டு ஆராதனையின்போது...

# தேர்தல்கள் ஊடாக 2024 இல் மக்கள் விருப்பு நிறைவேறும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் நம்பிக்கை



**கொழும்பு, ஜனவரி 1**

**பிறக்கின்ற புதிய ஆண்டில் தேர்தல்கள் ஊடாக மக்கள் எதிர்பார்க்கும் விடயங்கள் நிறைவேறவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

23

## 2024 இல் தேர்தலுக்கு போதுமான நிதி

கொழும்பு, ஜன. 1

2024ஆம் ஆண்டு சகல தேர்தல்களையும் நடத்துவதற்குப் போதிய நிதி உள்ளதாக திறைசேரியின் பதில் செயலர் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். ஜனாதிபதித் தேர்தல் உட்பட அனைத்துத் தேர்தல்களையும் நடத்துவதற்கு பத்து பில்லியன் ரூபா தேவை எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிக்கை அனுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-6)

## பெற்றோல் பதுக்கல் எரிபொருளுக்கு வரிசை

யாழ்ப்பாணம், ஜன. 1

எரிபொருள் விலை அதிகரிக்கப்படும் என்ற எதிர்பார்ப்பில் நேற்று மதியத்திலிருந்து யாழ்ப்பாணத்திலுள்ள பல எரிபொருள் விற்பனை நிலையங்களில் எரிபொருள் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது. இதனால் மக்கள்

23

## இந்து மதத்துக்கும் அரசமைப்பில் முன்னுரிமை

### யாழ். வரும் ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைக்க முடிவு

யாழ்ப்பாணம், ஜன. 1

பல்லாயிரம் ஆண்டுகாலமாக வரலாறு கொண்ட இலங்கையின் இந்து சமயத்துக்கு அரசமைப்பில் முன்னுரிமை அளிக்கவேண்டும் என்பது உள்ளிட்ட சில கோரிக்கைகளை ஜனாதிபதி

23

## வடக்கில் 6 மாதங்களுக்குள் குற்றச்செயல்கள் முடிவுக்கு!!!

### பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜன. 1

மாணவர்களுக்குப் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடுவோர் அடையாளம் காணப்பட்டு, தற்போது

23

## எலிக்காய்ச்சலால் இளைஞன் சாவு!

வவுனியா, ஜன. 1

வவுனியாவில் எலிக்காய்ச்சல் காரணமாக இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

செட்டிகுளம் முகத்தான் குளத்தைச் சேர்ந்த பிரசங்கர் (வயது - 19) என்ற இளைஞரே

23

### டெங்குக் கட்டுப்பாடு தீவிரம்

## 4 பிரதேச செயலர் பிரிவுகளில் அதிகாரிகள் இன்று பாய்ச்சல்

யாழ்ப்பாணம், ஜன. 1

யாழ்ப்பாணத்திலுள்ள 4 பிரதேச செயலர் பிரிவுகளில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இன்று முன்னெடுக்கப்படவுள்ளன. டெங்கு பரவுவதற்கு ஏதுவான சூழலுடன் காணப்படும் காணிகளின் உரிமை

23

## மயங்கியவர் உயிரிழப்பு

பருத்தித்துறை, ஜன. 1

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நோயாளி ஒருவர், தாதியுடன் உரையாடிக் கொண்டிருந்த

23

## ஏக்கங்கள், எதிர்பார்ப்புகளை புத்தாண்டு நிறைவு செய்யட்டும்

### ஆசிச் செய்தியில் யாழ். ஆயர்



யாழ்ப்பாணம், ஜன. 1

புதிய ஆண்டு மலருகின்ற வேளை உலகம் முழுவதிலும் இப்புத்தாண்டைக் கொண்டாடும் அனைவருக்கும் இப்புதிய ஆண்டு உங்கள் உள்ளத்து எண்ணங்கள் ஏக்கங்கள், எதிர்பார்ப்புகள் அனைத்தையும் நிறைவு செய்யும் இறை ஆசீர்மிக்க ஆண்டாக அமைய வாழ்த்துவ

23

## குடும்பத்தகராறு; தீக்கிரையான வீடு

வவுனியா, ஜன. 1

நெடுங்கேணி 17ஆம் கட்டையில் வீட்டை தீயிட்டுக் கொளுத்திய குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் தனது மனைவியைப் பிரிந்து வாழ்ந்து வருகின்றார். இந்த நிலையில் கடந்த சில தினங்களாக மனைவியையும் குடும்பத்தினரையும் அவர் அச்

23

**மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யுக்திய நாடகம்: மோதவும் தயார்!

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

**கொழும்பு, ஜன.1**
**மக்கள் கோரிக்கை விடுத்தால் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவதற்கு நானும் தயாராகவே இருக்கின்றேன் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.**

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட திட்டமிட்டுள்ளீர்களா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாட்டு மக்களுள் பெரும்பாலானவர்கள் கோரிக்கை விடுத்தால் அந்தக் கோரிக்கை ஏற்கப்பட வேண்டும். மக்கள் அவ்வாறு கோரிக்கை விடுத்தால் நான் மக்கள் பக்கம் நிற்பேன்.
யுக்திய நடவடிக்கைமூலம் என்ன நடக்கின்றது என்பது ஒரு வருடத்துக்குள் தெரியவரும். சிறைத் தண்டனை அனுபவித்து வந்தவர்களும் கைது செய்யப்படுகின்றனர். ஐந்து வருடங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டவர்கள், தற்போது குற்றம் செய்யாமல் வாழும்போது அவர் கைது செய்யப்பட்டால் அவரின் மனைவிக்கு குடுதான் விற்க வேண்டியேற்படும். இல்லையென்றால் பிள்ளைகளுக்கு உணவு கொடுக்க முடியாமற்போகும்.
இது சாதகமான நடவடிக்கை என நான் கருதவில்லை. நெத்தலி மீன்களே பிடிபடுகின்றது. இதுகூட நாடகமாகும் - என்றார். (எ-44)

## புதுவருட பஜனை

யாழ்ப்பாணம், ஜன. 1
2024ஆம் ஆண்டுக்கான புதுவருட சிறப்பு பஜனை நிகழ்வு இன்றுதிங்கட்கிழமை காலை 6.30 மணியளவில் திருநெல்வேலியில் அமைந்துள்ள ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.
காலை 7.15 மணியளவில் புதுவருடச் செய்தியும், அதனைத் தொடர்ந்து சுவாமியின் குரலில் பஜனையும் இடம்பெற்று, மகா மங்களாராத்தியுடன் நிகழ்வுநிறைவு பெறும். (ம66)



# வெண்முதுகு தத்தியால் நெற்செய்கை பாதிப்பு!

## ஒட்டுசுட்டான் விவசாயிகள் கவலை

முல்லைத்தீவு, ஜன. 1
முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட விவசாயச் செய்கை வெண்முதுகுத் தத்தித் தாக்கத்தால் பாதிப்புக்குள்ளாகியுள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.
தற்போது வெண்முதுகுத் தத்தித் தாக்கம் வேகமாகப் பரவி வரும் நிலையில் கிருமிநாசினிகள் தெளிக்கப்பட்டு நோய்த் தாக்கத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை.
உரிய அதிகாரிகள் இதுதொடர்பில் கவனம் செலுத்தி எமக்கான இழப்பீடு நிவாரணத்தை பெற்றுத்தர வழிவகுக்க வேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். (ச-500)

# யாழ்ப்பாணத்தில் காற்றாலை அனுமதிகோரும் நிறுவனம்!

யாழ்ப்பாணம், ஜன. 1
யாழ். மாவட்டத்தில் காற்றாலைகளை நிறுவுவதற்கு யாழ்.மாவட்டச் செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் தனியார் நிறுவனமொன்று அனுமதிகோரியுள்ளது.
பொன்னாலை மற்றும் மருதங்கேணி பிரதேசத்தில் இரண்டு பிரிவுகளாக காற்றாலைகளை அமைப்பதற்கே அனுமதி கோரப்பட்டது.
அதற்கு ஆளுநர் பதிலளிக்கையில், "இந்த விடயம் தொடர்பில் மாகாணசபைக்கு அறிக்கையிட வேண்டும்" என்று பணித்தார். (ச-125)

# குண்டும் குழியுமான வீதிகளால் சிரமம்!



கிளிநொச்சி, ஜன. 1
வன்னேரிக்குளத்தில் மழை வெள்ளத்தின்போது அமைக்கப்பட்ட பக்கப் பாதைகள் காரணமாக வீதிகளில் பெருங் குழிகள் ஏற்பட்டுள்ளன.
ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் வன்னேரிக்குளத்திலிருந்து ஜெயபுரம், பல்லவராயன்கட்டு, பாலாவி வரையான வீதி வேலைகள் தொடங்கப்பட்டபோது பக்கப் பாதைகள் கூடுதலாக அமைக்கப்பட்டன.
வீதி வேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில், வெள்ளம் வடிந்தோடுவதற்கான வழிகள் மூடப்பட்டுள்ளன.
வன்னேரிக்குளம், கரியாலை நாகபடுவான்குளம், பல்லவராயன்கட்டுக்குளம் என்பன வான்பாயத் தொடங்கியுள்ள நிலையில், பக்கப்பாதைகளால் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.
ஜெயபுரம், பல்லவராயன்கட்டு, கிராஞ்சி, வேரவில், பாலாவி, பொன்னாவெளி, வலைப்பாடு ஆகிய கிராமங்களில் குண்டும் குழியுமாக மாறியுள்ள வீதி வழியாகவே பெரும் சிரமத்துக்கு மத்தியில் மக்கள் பயணிக்கின்றனர் . (ரி-13)

# சான்றிதழுக்கே இனி அனுமதி

கொழும்பு, ஜன.1
யால வனவிலங்குகள் சரணாலயத்தினுள் நுழைவதற்கு "சஃபாரி" பயிற்சிபெற்ற வாகனச்சாரதிகளுக்கே அனுமதி வழங்கப்படும். ஏனைய வாகனச் சாரதிகளுக்கு அனுமதியில்லை என்று உல்லாசப்பயண அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. இந்த நடைமுறை இன்று முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வருகிறது. 'சஃபாரி' சான்றிதழ்கள் இல்லாத வாகனங்கள் எக்காரணம் கொண்டும் உள்ளே அனுமதிக்கப்படமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-6)

# டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம்!

யாழ்ப்பாணம், ஜன.1
யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் டெங்கு தொடர்பான விசேட செயற்றிட்டம் நல்லூர்ப் பிரதேச செயலகத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று நல்லூர்ப் பிரதேச செயலர் எழிலரசி அன்ரன் யோகநாதன் தெரிவித்தார்.
6 ஆயிரத்து 974 வீடுகளுக்கு களத்தரிசிப்புச் செய்யப்பட்டது. 53 விழிப்புணர்வு செயற்றிட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன. நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 241 நிறுவனங்களும் பார்வையிடப்பட்டு டெங்கு தொடர்பான விழிப்புணர்வு செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது -என்றார். (ரி-125)

### தென்மராட்சியில்

# டெங்குத் தொற்று டிசெம்பரில் உயர்வு

யாழ்ப்பாணம், ஜன. 1
தென்மராட்சிப் பிரதேசத்தில் டிசெம்பர் மாதத்தில் மட்டும் ஏராளமானோர் டெங்கால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த ஒரு வாரத்தில் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகப் பிரிவில் 44 பேரும் கொடிகாமம் பிரிவில் 10 பேரும் நாவற்குழி பிரிவில் 8 பேரும் சாவகச்சேரி நகரசபை பிரிவில் 7 பேரும் கைதடி, மட்டுவில், எழுதுமட்டுவாழ் ஆகிய பிரிவுகளில் தலா நால்வர் வீதமும் மந்துவில், வரணி ஆகிய பிரிவுகளில் தலா மூவர் வீதமும் பதிவாகியுள்ளனர். (ச-9)

# டெங்கு விழிப்புணர்வு

யாழப்பாணம், ஜன.1
சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு பரவல் தீவிர நிலையாக மாறுவதாக சுகாதாரத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. இதனையடுத்து சகல கிராம மட்ட உத்தியோகத்தர்களுக்கான டெங்கு விழிப்புணர்வுக் கூட்டம் மேற்படி பிரதேச செயலர் திருமதி யசோதா உதயகுமார் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு நடைபெற்றது. (ரி-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதாளக் குழுவினருக்கு அதிகாரிகள் அடைக்கலம்

## புலனாய்வுத்துறை அறிக்கை

**கொழும்பு, ஜன.1**

**புலனாய்வுத் திணைக்களத்தால் அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்ட அறிக்கையின்படி பாதாள உலகக்குழுவினர் மற்றும் குற்றவாளிகளுக்கு அடைக்கலம் கொடுக்கும் அரசியல்வாதிகள், பொலிஸ் அதிகாரிகள், சிறைச்சாலை அதிகாரிகள் என சுமார் இரண்டாயிரம் அரச அதிகாரிகள் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன.**

இந்த நிலைமை மாற்றப்படும் வரை பாதாள உலகத்தை ஒடுக்குவது கடினமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள பாதாள உலகப் புள்ளிகளை விடுவிப்பதற்காக பல்வேறு நிலைகளில் உள்ள அரசியல்வாதிகள் பொலிஸார் ஊடாக தலையிட்டுள்ளமையும் தெரியவந்துள்ளது என்று கூறப்படுகின்றது.

சில அரசியல்வாதிகளுடன் பாதாள உலகக் குழுவினர் தொடர்பில் உள்ளனர் என்றும், அந்த அரசியல்வாதிகளிடமிருந்து இவர்களுக்கு உயர் பாதுகாப்பு கிடைக்கின்றது எனவும் புலனாய்வுத்துறை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (எ-இ)

## கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜன. 1

யாழ்ப்பாணம் - வடமராட்சிப் பகுதியில் கசிப்புக் காய்ச்சிய இரண்டு பேர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை விசேட குற்றத் தடுப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட நடவடிக்கையின்போதே மேற்படி நபர்கள் கைது செய்யப்பட்டனர். (ம-23)

## 11 நாள்கள் சுற்றிவளைப்பில் ரூ. 85 கோடி போதைப்பொருள்

கொழும்பு, ஜன.1

யுக்திய விசேட நடவடிக்கையின்போது 11 நாள்களில் கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் சந்தைப் பெறுமதி சுமார் 85 கோடி ரூபா எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 55 கோடி ரூபாவுக்கும் அதிகமான சொத்துகள் முடக்கப்பட்டுள்ளன என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு நேற்றுத் தெரிவித்தது.

இந்தக் காலப்பகுதியில் போதைப்பொருள் தொடர்பான தகவல்களை வழங்குவதற்காகப் பொதுமக்கள் பொலிஸ் மற்றும் பாதுகாப்புத் திணைக்களங்களுக்கு 10 ஆயிரத்து 798 தொலைபேசி அழைப்புகளை எடுத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-44)

## உள்ளாடைக்குள் 7 கிலோ தங்கம்!

### ஒருவர் கைது

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வெளியேறும் முனையத்தில் இலங்கை சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவு அதிகாரிகளால் ஸ்ரீலங்கன் கேட்டரிங் நிறுவனத்தின் ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தங்க பிஸ்கட்டுகளுடன் சந்தேகநபர் விமான நிலைய புறப்படும் முனையத்தின் பணியாளர்கள் வெளியேறும் வாயில் வழியாக வெளியேறும்போது கைது செய்யப்பட்டார் என்று சுங்கப் பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபரின் உள்ளாடைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 66 தங்க பிஸ்கட்டுகள் சுங்க அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டன (எ-இ)

## ரஷ்யா மீது உக்ரைன் பதிலடித் தாக்குதல்!

ரஷ்யா மீது உக்ரைன் நடத்திய பதில் தாக்குதலில் 3 குழந்தைகள் உட்பட 21பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் உக்ரைனின் பல நகரங்கள் மீது ரஷ்யா தொடர் தாக்குதல்களை நடத்தியது. சுமார் 150 ரொக்கெட்களால் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலால் உக்ரைன் நிலைகுலைந்தது. இந்த நிலையில், இதற்குப் பதிலடியாகவே ரஷ்யா மீது உக்ரைன் பதில் தாக்குதலை நடத்தியுள்ளது. இதற்குப் பதிலடி கொடுக்கப்படும் என்று ரஷ்யா எச்சரித்துள்ளது. (ம)

## துப்பாக்கிச்சூடு பொலிஸ் சாவு!

கொழும்பு, ஜன.1

மாத்தளை, பெலன பகுதியில் நேற்றுக்காலை நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பொலிஸ் அதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றொருவர் காயமடைந்துள்ளார்.

கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தரே உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸாரின் சோதனை நடவடிக்கையில் இனந்தெரியாத நபர் ஒருவர் துப்பாக்கிச்சூட்டை நடத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## கஞ்சாவுடன் ஒருவர் மயிலிட்டியில் கைது

யாழ்ப்பாணம், ஜன. 1

யாழ்ப்பாணம் மயிலிட்டிப் பகுதியில் கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே மேற்படி நபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 5 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. (ம-125)




## புதினம் தெரியுமோ?

**இன்டைக்கு புது வருசம். ஆனால் வழக்கமா புது வருசமெண்டால் நடக்கிற அமளியள் இந்தமுறை சரியான குறைவு. இல்லாட்டி புது வருசம் பிறக்கிறதுக்கு ஒருகிழமைக்கு முதலே றோட்டுவழியளில பார்ட்டி, வெடி எண்டு எல்லா ஏரியாவும் களைகட்டியிருக்கும். அதைமாதிரி அடிதடியளுக்கும் குறைவிருக்காது. குடிச்சதெல்லாம் ஏற ஏற, வாயும் நீண்டு, பிறகு கையும் நீண்டு, வாள்வெட்டு வரை போறது. ஆனால் இந்தமுறை றோட்டுவழியளில அப்பிடியான பார்ட்டியளைக் காண முடியேலை. அதுக்கு முக்கியமான காரணம், பொருளாதார நெருக்கடியில்லை, இப்ப நாடு முழுக்க நடக்கிற பொலிஸ் வேட்டைதானாம்.**

**ஆராவது டவுட்டா நடமாடினால் , உடனேயே அவையைச் செக் பண்ணி , அவை ஏதும் போதை பாவிச்சிருக்கினம் எண்டாலோ இல்லாட்டி பொருளுகள் வைச்சிருந்தினம் எண்டாலோ அப்பிடியே ஆக்களை 'அலாக்கா' தூக்கி உள்ள போடுறதில பொலிஸ்காரர் இப்ப கடுமையா இருக்கினமாம். நாடு முழுக்க இதுவரைக்கும் 20 ஆயிரம் பேருக்குமேல அரஸ்ட் பண்ணியிருக்கினம். அவையை அடைச்சு வைக்க ஜெயிலுக்குள்ளையே இடமில்லையாம். அந்தளவுக்கு அறம்புறமா அரஸ்ட் பண்ணிக்கொண்டே இருக்கினம்.**

**ஆனால் அப்பிடி அரஸ்ட் பண்ணுப்படுற ஆக்களும் லேசுப்பட்டவை இல்லை. முக்கியமா போதைப்பொருள் பாவிச்சவையெண்டு பிடிபட்டவையில சிம்பிளா ஒரு விளையாட்டுக்காட்டி, எல்லாரின்ர தலையையும் சுத்திப்போட்டு, வெளியில வருகினமாம். அப்பிடி என்ன விளையாட்டுக் காட்டினம் எண்டு கடுமையா யோசிக்காதையுங்கோ. ஒராளைப் போதைப்பொருள் பாவிச்சிருக்கிறார் எண்ட சந்தேகத்தில பொலிஸ்காரர் பிடிச்சால், அதை உறுதிப் படுத்த 'யூரின் டெஸ்ட் ' செய்யிறவை. அதுக்காக ஒரு சின்னப்போத்திலை குடுத்து, 'பாத்ரூமுக்க ' போய் யூரினை எடுத்துக் கொண்டு வரச்சொல்லுவினம். இங்கதான் போதைப்பொருள் கேஸில பிடிபட்டவை தங்கட மொத்த வித்தையையும் இறக்கியிருக்கினம். பிடிபட்ட ஆக்களைப் பாக்க வாறவை, சாப்பாடும் கொண்டந்து குடுப்பினம். அப்பிடி கொண்டுவாற சாப்பாட்டுக்க கறியளை தனித் தனியா சின்னச் சின்ன பொலித்தீன் பையுக்கதான் கட்டியந்து குடுப்பினம். கறிவந்த அந்த பொலித்தீன் பையளை, இப்பிடி யூரின் எடுக்கப் போகேக்க நைசா கொண்டு போய், அதுக்குள்ள தண்ணியை நிரப்பிப்போட்டு, ஒரு குலுக்கு குலுக்கிட்டு , பிறகு அந்தத் தண்ணியை போத்திலுக்குள்ள விட்டுக் கொண்டந்து குடுக்கினம். பார்க்கவும் அது யூரின் மாதிரி இருக்கிறதால ஆருக்கும் எந்தச் சந்தேகமும் வராது. டெஸ்ட் பண்ணேக்கையும் அதில போதைப் பொருள் இல்லையெண்டுதான் ரிசல்ட் வரும். அந்த ரிப்போர்ட்டை காட்டி, கனபேர் பிடிபட்ட வேகத்திலேயே வெளியில போகினமாம். பெடியள் மட்டுமில்லை பொம்பிளையளும் இப்பிடி யூரின்ல கலப்படம் செய்யினமாம். அரிசியில கலப்படம், சீனியில கலப்படம், எண்ணெயில கலப்படமெண்டு தொடங்கி இப்ப யூரின்லகூட கலப்படம் செய்யிற அளவுக்கு எங்கட ஆக்கள் எங்கையோ போட்டினம்.**



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புத்தாண்டு பலன்கள் 2024

## மேடம்



மற்றவர்களின் நல்வாழ்வுக்காக தன் பங்கை முன்வந்து தரும் மேஷ ராசி அன்பர்களே!

இவ்வாண்டில் எதையும் துணிவுடன் எதிர்கொள்ளும் ஆற்றல் வந்து சேரும். பல நற்செயல்கள் செய்து உறவினர்கள், நண்பர்கள் மற்றும் சமுதாயத்தில் பெயரும் புகழும் அடைவீர்கள். பொருளாதார வரவுகளும், ஆடை, ஆபரண சேர்க்கைகளும் அபரிமிதமாக இருக்கும்.

குழந்தைகள் வகையிலும் பூர்வ சொத்துகளாலும் வருமானம் உண்டு. பூமி, மனை, நிலங்கள் தொடர்பானவற்றில் இருந்த எதிர்ப்புகள் மாறி அனுகூலமான பலன் கிட்டும். தொழில்ரீதியாக எதிரிகள் முடங்கிப் போவார்கள்.

நண்பர்கள் வகையில் கொடுக்கல், வாங்கல் விடயத்தில் பிணை கையெழுத்து போடுவது போன்ற காரியங்களில் ஈடுபடவேண்டாம். இவ்வாண்டு முழுவதும் சந்தோஷ அனுபவங்கள் ஏற்படும். ஆதாயமாக வரும். பணம் முழுவதையும் சேமிக்கும் வாய்ப்பு கிட்டும்.

புத்திர வகையில் புகழும் பெருமையும் உண்டாகும். வீட்டை புதுப்பிக்கும் நிலை ஏற்படும். அழகு சாதன பொருள் உற்பத்தி செய்வோர் மேன்மை பெறுவர். விஷப்பிராணிகளிடமிருந்து விலகியிருக்க வேண்டும். கால்வலி, முதுகுவலி உடையவர்கள் சிகிச்சையை தொடர வேண்டி வரும். போக்குவரத்தின்போது விழிப்புடன் செயற்பட வேண்டும். தொழிலில் கிடைக்கும் ஆதாயம், தொழில் வளர்ச்சிக்கே பயன்படுத்தப்படுவதற்கான வாய்ப்புக் கிட்டும். புத்திரர்கள் வகையில் சுபச் செலவுகள் உண்டாகும்.

**உத்தியோகத்தர்களுக்கு...**

பணியில் மிகுந்த கவனம் செலுத்தி நற்பெயர் பெறுவீர்கள். அதிகமாக சம்பள உயர்வும், பாராட்டும், பரிசும் கிட்டும். மனதில் தைரியம் உண்டாகும். ஒரு சிலருக்கு உத்தியோக உயர்வு. இடமாற்றம், புது வீடு வாங்குதல், புதிய வாகனம் வாங்குதல் ஆகிய பலன்கள் நடக்கும். மனைவி மற்றும் குழந்தைகளுக்கு ஆபரணச் சேர்க்கை உண்டாகும். திடீரென சுபச் செலவு வரும்.

**மாணவர்களுக்கு...**

மற்றவர்களுக்குச் சேவை செய்யும் நல்ல வாய்ப்புகள் உங்களைத் தேடி வரும். கிடைத்த வாய்ப்பை முழு மனதுடன் செயற்படுத்தி கல்வியில் வளர்ச்சி காண முடியும். நண்பர்களின் தேவையில்லாத ஆடம்பரச் செலவுகளுக்குத் துணைபோகக்கூடாது. கல்வியில் இருந்த கவனச் சிதறல்கள் மாறி நல்ல மதிப்பெண் பெறுவீர்கள்.

**பெண்களுக்கு...**

மனதில் இருந்த சஞ்சலங்கள் சூரியனைக் கண்ட பனி போல விலகிவிடும். சகதோழிகளுக்கு கொடுத்து உதவும் அளவுக்கு பொருளாதார நிலை வளம் நிறைந்ததாக இருக்கும். புத்திரபேறு தாமதமின்றிக் கிடைக்கும் வாய்ப்பு உண்டு. கணவன் மனைவி ஒற்றுமை நன்றாக இருக்கும். குழந்தைகளால் பெருமை ஏற்படும்.

## விஜயகாந்துக்கு நேரில் சிவாஜிலிங்கம் அஞ்சலி

சென்னை, ஜன. 1

தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் தலைவரும், ஈழத்தமிழர்களின் நலனில் பற்றுக் கொண்டவருமான விஜயகாந்தின் உடலுக்கு, சிவாஜிலிங்கம் நேரில் அஞ்சலி செலுத்தியுள்ளார்.

கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்த விஜய காந்தின் இறுதிக்கிரியைகள் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றன.

இதன்போதே விஜயகாந்தின் புகழுடலுக்கு நேரில் அஞ்சலி செலுத்திய சிவாஜிலிங்கம், ஈழத்தமிழர்களின் நலனில் அவர் கொண்டிருந்த அக்கறையையும் பற்றையும் நன்றியுடன் நினைவு கூர்ந்தார். ஈழத்தமிழர்களின் சார்பில் தனது நன்றியையும் அஞ்சலியையும் அவர் விஜயகாந்தின் குடும்பத்தினரிடம் தெரிவித்தார். (ம-26)

## பெண் மீது கத்திவெட்டு

வன்னேரிக்குளம், ஜன. 1

கத்திவெட்டுக்குள்ளான பெண்ணொருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். கிளிநொச்சி - பூநகரி, வலைப்பாட்டைச் சேர்ந்த அவர், கணவனின் கத்திவெட்டுத் தாக்குதலுக்கு இலக்கான நிலையிலேயே படுகாயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். போதையில் இருந்த கணவன், மனைவியுடன் தாக்கத்தில் ஈடுபட்டதுடன் மனைவி மீது கொடும் தாக்குதலை நடத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-13)

## டெங்குத் தடுப்புத் திட்டம்!

யாழ்ப்பாணம், ஜன. 1

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் இதுவரை காலத்தில் இல்லாதளவுக்கு உயர்ந்துள்ள நிலையில், டெங்குத் தடுப்பு நடவடிக்கைகள் சுகாதாரப் பரிசோதகர்களால் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

நல்லூர், கோப்பாய், சண்டிலிப்பாய் ஆகிய பகுதிகளில் டெங்குத் தொற்று தீவிரம் பெற்றுள்ள நிலையில் அந்தப் பகுதிகளிலேயே அண்மைக் காலமாக டெங்குத் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

டெங்கு பரவுவதற்கு ஏதுவாக இருந்த இடங்கள் பல அவதானிக்கப்பட்டு, காணிகள் மற்றும் உடைமைகளின் உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடுத்ததுடன் உரிய காலத்துக்குள் அவை துப்பரவாக்கப்படுத்தப்பட வேண்டும் என்று அறிவுறுத்தலும் வழங்கப்பட்டது. (ம-23)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். அக்கம், பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள். புதுமை படைக்கும் நாள்.

**இடபம்:** எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். சகோதரி உதவுவார். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். தாயாருடன் கருத்து மோதல்கள் வரக்கூடும். புதுவேலை அமையும்.

**மிதுனம்:** துணிச்சலாக சில முக்கியமான முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்களின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும்.

**கடகம்:** மனக்கசப்பு நீங்கும். தோற்றப் பொலிவுக் கூடும். நீண்ட நாள் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள். நேர்மறை எண்ணங்கள் பிறக்கும். புது நட்பு மலரும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும்.

**சிம்மம்:** அநாவசிய பேச்சை தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம். அதிக நற்பலன்களைப் பெறுவீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**கன்னி:** விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். பிள்ளைகளால் பதற்றம் அதிகரிக்கும். ஆடம்பர செலவுகளால் சேமிப்புகள் கரையும். உடல் நலத்தில் கவனம் தேவை. லாபம் ஈட்டுவீர்கள்.

**துலாம்:** நீண்டநாள் விருப்பம் நிறைவேறும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். கடன் பிரச்சினை கட்டுக்குள் வரும். கல்யாண முயற்சிகள் பலிதமாகும்.

**விருச்சிகம் :** உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். பிள்ளைகள் நம்பிக்கை தருவார்கள். உத்தியோகத்தில் நன்மதிப்பு பெறுவீர். சாதித்துக் காட்டும் நாள். சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**தனுசு:** குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும்.

**மகரம்:** எந்த காரியத்தை தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். பணம் நகை வாங்கித் தருவதில் ஈடுபட வேண்டாம். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

**கும்பம்:** கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் ஆதாயமும் உண்டு.

**மீனம்:** கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உறவினர் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் பிரதேச சபை

# பொது அறிவித்தல் - 2024

நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குள் வசிக்கும் பொதுமக்களும் வர்த்தக நிலைய உரிமையாளர்களும் அரச தனியார் நிறுவனங்களின் தலைவர்களும் 2024.01.01 ஆம் திகதி முதல் எமது பிரதேச சபையால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பின்வரும் நடைமுறைகளையும் அறிவித்தல்களையும் பின்பற்றி சபையின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியுதவுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**01. ஆதன வரி**

2024ம் ஆண்டுக்கான ஆதன வரியினை தங்களுக்குரிய உப அலுவலகத்தில் அதாவது ஆடியபாதம் வீதி திருநெல்வேலியில் அமைந்துள்ள நல்லூர் அலுவலகத்திலும் குளப்பிட்டி - ஆனைக்கோட்டை வீதி கொக்குவிலில் அமைந்துள்ள கொக்குவில் உப அலுவலகத்திலும் செலுத்தி சபையின் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வரியிருப்பாளர்களை கேட்டுக்கொள்கின்றேன். இவ் ஆதனவரியை 31.01.2024ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோர் ஆண்டுக்கான மொத்த வரியில் 10% கழிவினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு ஒவ்வொரு காலாண்டிற்குரிய வரியை குறித்த கந்தாயத்தின் முதல் மாதம் முடிவதற்குள் செலுத்துவோருக்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன். குறிப்பிட்ட திகதிக்குள் ஆதன வரியை செலுத்த தவறின் விறாந்துக்கட்டணமாக (தண்டம்) வெற்றுக்காணி அல்லது வதிவிட ஆதனங்களுக்கு 15%உம் ஏனைய ஆதனங்களுக்கு 20% உம் ஆதன வரியுடன் சேர்த்து மேலதிகமாக அறவிடப்படும். எனவே குறித்த ஆதன வரிகளை 31.01.2024ஆம் திகதிக்கு முன் எமது உப அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக்கழிவுகளைப் பெற்று ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**02. ஆதனப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்தல்**

எமது சபை நிர்வாகத்திற்கு உட்பட்ட ஆதனங்களை கொள்வனவு செய்பவர்களும் ஏற்கனவே ஆதன உடமையினைக் கொண்டுள்ள போதிலும் எமது சபையின் ஆதன இடாப்பில் பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளாதவர்களும் எமது உப அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு உரிய நடைமுறையினை பின்பற்றி பெயர் மாற்றத்தினையும் ஆதனத்தில் பௌதீக மாற்றம் ஏற்படுத்தினால் ஆதன பிரிவிடுகை மாற்றத்தினையும் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**03. 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைச் சட்டம் மற்றும் தொடர்புடைய ஏனைய சட்டங்களின் கீழ் கட்டுமாணங்களிற்கான அனுமதிப் பத்திரம் வழங்கல்**

i. எமது நிர்வாகத்திற்குற்பட்ட பிரதேசத்தில் கட்டடங்கள், எல்லைச்சுவர், எல்லைத்தூண்கள், தொலைத் தொடர்பு கோபுரங்கள், மலசல கூடங்கள், குழாய் கிணறுகள் போன்றவற்றை அமைத்தல் அல்லது புதுப்பித்தல் அல்லது பழைய கட்டடத்தினை திருத்துத வேலை செய்வதாயின் பிரதேசசபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து உரிய அனுமதி பெற்ற பின்னரே அமைக்கப்படல் வேண்டும். தவறின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

ii. புதிய கட்டட விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் போது மழை நீர் சேகரிப்பிற்கான கட்டுமானங்கள் கட்டாயம் அமைக்கப்படுதல் வேண்டும்

iii. புதிய கட்டடம் அமைப்பதற்கு உரிய அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் வேலை பூர்த்தியாகாதவிடத்து உரிய கட்டணம் செலுத்தி கட்டட அனுமதியைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

iv. கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதும் பிரதேசசபையின் உரிய உப ஆலுவலகங்களுக்கு கட்டிடம் பூர்த்தி செய்தமை தொடர்பில் அறிவித்து உரிய கட்டணத்தைச் செலுத்தி அமைவுச் சான்றிதழைப் (COC) பெற்றுக் கொண்ட பின்னரே கட்டடத்தினை பயன்படுத்துதல் வேண்டும். பகுதியாக பூரணப்படுத்தியும் அமைவுச்சான்றிதழைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

v. சபை எல்லைக்குள் குழாய்க் கிணறுகள் அமைப்பவர்கள் உரிய விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து சபையின் அனுமதி பெற்று அமைத்தல் வேண்டும்.

vi. பொதுப்போக்குவரத்திற்கு இடையூறாக சபை அனுமதியின்றி வீதியோரங்களில் அமைக்கப்படும் நிரந்தர மற்றும் தற்காலிக அலங்கார அமைப்புக்கள் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளன.

**04. சூழல் பாதுகாப்பு உரிமம்**

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் 1980ம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் பாதுகாப்பு சட்டத்தின் 23(அ) எனும் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் அடிப்படையில் நல்லூர் பிரதேச சபையின் நிர்வாக பிரதேசத்தில் 2264/18 இலக்க 2022.01.27 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தகமான பத்திரிகையில் விதந்தரைக்கப்பட்ட (ஈ) பிரிவிற்கமைய வியாபாரம் அல்லது தொழில்களிற்கு சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்கப்படுகின்ற பொறுப்பு சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் நல்லூர் பிரதேசசபை தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தினை பெற்றுக் கொள்ளவும். ஏற்கனவே உரிமத்தை பெற்றுக் கொண்டவர்கள் உரிமம் காலாவதியாகி இருப்பின் அதனை புதுப்பித்துக் கொள்ளவும். வலுவில் உள்ள சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் இல்லாமல் மேற்குறிப்பிட்டதொழில்களை நடாத்தினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு தண்டப்பணமும் அறவிடப்படும்.

**05. வியாபார உரிமம் மற்றும் அனுமதிப்பத்திரம் 2024**

இப் பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குப் பொருள்களை விநியோகிப்போர் 2024ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதிக்குள் உரிய விண்ணப்பங்களை கொக்குவில், நல்லூர் ஆகிய உப அலுவலகங்களில் பெற்று அதனைப் பூரணப்படுத்தி உரிய உப அலுவலகங்களில் சமர்ப்பித்து 31.03.2024ஆம் திகதிக்கு முன்னர் உரிய கட்டணங்களை செலுத்தி வியாபார அனுமதிப்பத்திரத்தை (Trade license) பெற்றுக்கொள்ளல் வேண்டும். 31.03.2024ஆம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**06. துவிச்சக்கர வண்டி உரிமம்**

துவிச்சக்கர வண்டிகள் வைத்திருப்போர் 2024.03.31ஆம் திகதிக்கு முன் உரிய உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களை செலுத்தி 2024ம் ஆண்டுக்கான துவிச்சக்கரவண்டி உரிமங்களைப் பெற்றுக்கொள்ளவும்.

**07. மிருகங்களுக்கான உரிமம்**

வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 2024.03.31ஆம் திகதிக்கு முன் உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களை செலுத்தி 2024ஆம் ஆண்டுக்கான மிருக உரிமங்களைப் பெற்றுக்கொள்ளவும்

**08. விளம்பரங்கள் அமைத்தல் அல்லது காட்சிப்படுத்தல்**

பிரதேசசபை எல்லைக்குள் வர்த்தக நிலையங்களில் அல்லது பொது இடங்களில் அமைக்கப்படும் விளம்பரப் பலகைகளுக்கு பிரதேசசபையின் அனுமதியைப் பெற்றே விளம்பரங்களைக் காட்சிப்படுத்த வேண்டும். அனுமதி பெறப்படாத விளம்பரங்கள் அனைத்திற்கும் எதிர்வரும் ஜனவரி மாதம் 31 ம் திகதிக்கிடையில் உரிய முறையில் விண்ணப்பித்து அனுமதி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். அனுமதி பெறப்படாது காட்சிப்படுத்தப்பட்டுள்ள விளம்பரங்கள் யாவும் 2024.02.01ஆம் திகதியிலிருந்து பிரதேச சபையினால் அகற்றப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**09. வீதி ஒழுங்கும் தெருவோர வியாபாரமும்.**

நல்லூர் பிரதேச சபையின் எல்லைப் பகுதிகளில் வீதி ஒழுங்கைப் பேணி நடக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது. மேலும் அதிகரித்தபோக்குவரத்து காரணமாக விபத்துக்களை தவிர்க்கும் முகமாக வியாபார நிலையங்களிற்கு முன்னால் பாதசாரிகளின் போக்குவரத்திற்கு இடையூறாக பொருட்களை வெளியே வைத்து விற்பனை செய்வது, காட்சிப்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களிற்கு அறியத்தருகின்றேன். மேலும் பொது மக்கள் வீதி போக்குவரத்துக்கு இடையூறாக வீதி ஓரங்களில் கல், மண், சல்லி போன்ற கட்டடப்பொருட்கள் சேமித்துக் கொள்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றேன். வீதியோர பெட்டிகடைகள் மற்றும் தற்காலிக வியாபாரங்கள் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளன. நடமாடும் வியாபாரங்களிற்கு மாத்திரம் அனுமதி வழங்க பரிசீலிக்கப்படும். அத்தோடு சுகாதார பிரிவினரின் சிபாரிசு பெறப்படாத மற்றும் அனுமதி பெறப்படாத நடைபாதை வியாபாரம் நடமாடும் சுண்டல், சோளம் மற்றும் சிற்றுண்டி விற்பனைக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. இவ் அறிவித்தலை மீறி செயற்படுபவர்களது வியாபார பொருட்கள் பிரதேச சபை உடனடியாக அகற்றப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**10. பொதுச் சுகாதாரத்தைப் பேணுதல்**

பராமரிப்பு இன்றி பற்றைகளாக காணப்படும் காணிகளின் காணி உரிமையாளர்களிற்கெதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவே பற்றைகளாக உள்ள காணிகள் உடனடியாக துப்பரவு செய்யப்படல் வேண்டும் என்பதுடன் இதனை மேற்கொள்ள தவறுபவர்களது துப்பரவு செய்யப்படாத ஆதனம் பிரதேச சபையால் பொறுப்பேற்கப்பட்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக பொருத்தமான நடவடிக்கைமேற்கொள்ளப்படும். மேலும் உணவு வகைகளை கையாளும் நிலையப் பணியாளர்கள் முகக் கவசம் அணிவதுடன் மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.

**11. கழிவுப்பொருட்கள் சேகரிப்பு முறை.**

1987ம் ஆண்டின் 15ம்இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் பொது மக்களினால் தரம்பிரித்து வழங்கப்படுகின்ற சமயலறைக் கழிவுகள் மட்டும் இலவசமாக அகற்றுவதற்கு சபையால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் ஏனைய கழிவுகள் யாவும் கட்டணம் செலுத்தியே அகற்றப்படுதல் வேண்டும். தரம் பிரித்து வழங்கப்படாத கழிவுப்பொருட்கள் பிரதேச சபையால் அகற்றப்பட மாட்டாது என்பதுடன் அவற்றினை வீதிகளில் வீசுவோர் மீது உரிய கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் அறியத்தருகின்றோம். மேலும் உணவகங்கள் கடைகள், அரச, தனியார் நிறுவனங்கள் அல்லது பொது அமைப்புக்களினால் கோரிக்கையின் பிரகாரம் உரிய கட்டணத்துடனான கழிவுகள் அகற்றுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**12. டெங்கு நோயின் தாக்கத்தை கட்டுப்படுத்தல்**

நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக பிரதேச சபையால் மேற்கொள்ளப்படும் சகல நடவடிக்கைகளிற்கும் பொதுமக்கள் மற்றும் அரச தனியார் நிறுவனங்கள் தங்களது பூரண ஒத்துழைப்பினை வழங்குதல் வேண்டும். அத்துடன் ஒவ்வொரு குடியிருப்பாளர்களும் தங்களது வீடுகள் மற்றும் வீட்டு சுற்றாடலில் நீர் தேங்கி நுளம்பு பெருகுவதற்கு ஏதுவான சிறிய மற்றும் பெரிய அளவிலான கொள்கலன்களை சேரித்து பிரதேச சபையின் கழிவகற்றல் வாகனங்களில் ஒப்படைக்க முடியும். இவ் அறிவுறுத்தலை மீறி நுளம்பு பெருக்கத்திற்கு ஏதுவாக சுற்றாடலை வைத்திருப்போர் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**13. பொதுச் சந்தை**

எமது பிரதேசசபை எல்லைக்குட்பட்ட சந்தைகளில் தரகர் மூலமான நடைமுறை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறும், நிலக்கீழ் விளைச்சல் தவிர்ந்த ஏனைய மரக்கறிகளுக்கு கழிவுமுறை முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது என்பதும் அறியத்தரப்படுகின்றது. அத்துடன் எந்தவொரு உள்ளூராட்சி அதிகார சபைக்கு சொந்தமான பொதுச் சந்தைச் சுற்றாடலில் இருந்தும் 500 மீற்றர் சுற்று வட்டாரத்தில் கடல் உணவுகள், மரக்கறிகள், கிழங்குவகைகள், தேங்காய், இறைச்சி வகை என்பன விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. மீறிச் செயற்படுபவர்கள் மீது உரியவாறு சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**14. இரசாயன மருந்து விசிறிய பழங்கள்**

பொது மக்களுக்கு தீங்கு விளைவிக்க கூடிய முறையில் அனுமதியற்ற நியமங்களை மீறி மருந்து விசிறிய பழங்கள் விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளதுடன் மீறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**15. கட்டாக்காலிகள்**

பொது மக்கள் தமது கால்நடைகளை கட்டி வைத்து வளர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். இதனை மீறும் சந்தப்பங்களில் பொதுவீதியில் அலைந்து திரியும் கட்டாக்காலிகள் சபையால் பிடிக்கப்பட்டு உரிய சட்டங்களின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**16. கழிவுநீர் வாய்க்கால் பராமரிப்பு**

பகிரங்க வடிகால்கள் மற்றும் வாய்க்கால்களினுள் வீட்டு கழிவு நீர் மற்றும் வியாபார நிலைய கழிவுநீர் உட்பட எந்தவிதமான கழிவு நீரினையும் விடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. இதனை மீறி செயற்படுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**17. பொதுப்போக்குவரத்துக் இடையூறாக பெரும் கட்டுமான பொருட்களை பறித்தல்.**

பொது வீதியில் சபை அனுமதியின்றி கட்டுமான பொருட்கள் சேகரித்து வைத்தல், உரிய குறியீடுகள் காட்சிப்படுத்தாது விடல் மற்றும் டெங்கு நோய்க்காவி பரவக்கூடிய ஆபத்தான முறையில் கட்டுமாண இடங்களை வைத்திருத்தல் தவிர்க்கப்படல் வேண்டும்.

"எமது வருங்கால சந்ததிக்காகவும் பிரதேசத்தினதும் அபிவிருத்திக்காகவும்" எமது பிரதேச சபையின் அறிவுறுத்தல்களை அனுசரித்து நடக்குமாறு தயவுடன் வேண்டிக்கொள்கின்றேன்.

**2024.01.01**

**யுகராஜா ஜெலீபன்**
**செயலாளர்**
**நல்லூர் பிரதேச சபை**

(CR 41427)(k-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# தீர்க்கமான 2024!

புத்தாண்டு மலர்ந்திருக்கின்றது. பல்வேறுபட்ட சவால்கள், நெருக்குவாரங்கள், பொருளாதார நெருக்கடிகள், அரசியற் பிரச்சினைகள் நிறைந்ததாக 'காலங்கள் மாறினாலும் காட்சிகள் மாறுவதில்லை' என்பதாகத்தான் இந்தப் புத்தாண்டையும் நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது.

2022ஆம் ஆண்டு முடிவுக்கு வந்து 2023ஆம் ஆண்டு மலரும்போது, தமிழர்கள் மத்தியில் கடந்த சில வருடங்களாகவே இல்லாத எதிர்பார்ப்பு மேலிட்டிருந்தது. ஏனெனில், 2022ஆம் ஆண்டு பொருளாதாரப் பேரிடர், வங்குரோத்து நிலை என்று துன்பியல்களைத் தந்தபோதிலும், கூடவே 'அரகலய' மக்கள் புரட்சி போன்ற பல்வேறுபட்ட படிப்பினைகளையும் வழங்கத் தவறவில்லை. இந்த 'அரகலயவின்' தாக்கம் 2023ஆம் ஆண்டிலும் நீடிக்கும். அது தமிழர்களின் நீண்ட நாள் கனவுகள் மெய்ப்பட வழிகோலும்' என்ற நம்பிக்கை தமிழர் தாயகத்தின் இதயக்கூட்டில் ஆங்காங்கே துளிர்க்கவே செய்தது. அல்லாமலும், 2023ஆம் ஆண்டு ஜனவரியில்தான் தமிழர்களுக்கு தீர்வு வழங்கப்படவேண்டும் என்ற விடயம் 'உண்மையான' பேசுபொருளாக தெற்கில் மேலிட்டது. வழக்கமான ஒற்றையாட்சி, சமஷ்டி என்ற பித்தலாட்டத்தை தமது அரசியலாகக் கொண்டிருந்த கட்சிகள் யாவும் தமிழர்களுக்குத் தீர்வு வழங்கவேண்டும் என்ற விடயத்தில் விரும்பியோ விரும்பாமலோ ஒன்றித்திருந்தன. 'போர்க்கால' அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சர்வகட்சிப் பேச்சுகள், சுதந்திர தினத்துக்குள் தீர்வு வழங்கப்படும் என்ற ஜனாதிபதியின் வாக்குறுதிகள் என அனைத்தும் ஒன்றுசேர்ந்து கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத நம்பிக்கையை 2023ஆம் ஆண்டில் தமிழர் மனங்களில் விதைக்கவே செய்தன.

ஆனால், இந்த விடயங்களெல்லாம் காலப்போக்கில், 'பெருங்கடலில் வீசப்பட்ட கல்' போன்றாகிவிட்டன. பார்வைப் புலத்திலிருந்து கொஞ்சம்கொஞ்சமாக மறைந்து சென்ற 'நம்பிக்கை' என்னும் அந்தக் கல், இப்போது காணாமலேயே போய்விட்டது. தமிழர்களின் அரசியல் வேணவாவை பொருளாதார இடர்பாடுகளை, நிவர்த்தித்து நிறைவேற்றக்கூடிய ஆரம்பப் புள்ளியோ குறைந்தபட்சம் அதற்குரிய நம்பிக்கைக் கீற்றொளியோ இப்போது கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் இல்லவேயில்லை. இவ்வாறான வெற்று மனோநிலையில்-நம்பிக்கையற்ற தன்மையில்தான் புத்தாண்டை நாம் இன்று வரவேற்றிருக்கின்றோம்.

ஆனால், 2024ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டாக இருப்பது தமிழர்களுக்கு ஒரு சாதகத்தனம்தான். இந்தத் தேர்தல்காலம் பரந்துபட்ட பேரம் பேசலுக்கான வாய்ப்பை தமிழ் அரசியல்தலைவர்களுக்கு வழங்கவே செய்யும். அதை அவர்கள் கனகச்சிதமாக ஓரணியில் நின்று பயன்படுத்த வேண்டும். அவர்கள் தீர்க்கமாகவும் தீர்மானமாகவும் தெளிந்த அறிவுடனும் செயற்பட வேண்டியது காலத்தின்தேவை. வழக்கமான அரசியல் பகடையாட்டங்களுக்கு எடுபடாமல், மக்கள் மயப்பட்ட சிந்தனைகளை வெளிப்படுத்தி - மிகக் காத்திரமான முடிவுகளை எடுக்க புதிய வருடம் துணை செய்யட்டும்.



# வரி அறவீட்டு கொள்கையில் மாற்றம் ஏற்படுத்த முடியாது

## மத்திய வங்கி தெரிவிப்பு

**கொழும்பு, ஜன.1**

**வரி அறவீட்டைப் பொறுத்தவரையில் சர்வதேச நாணய நிதியத்துடன் எட்டப்பட்ட இணக்கப்பாட்டுக்கு அமைய கொள்கை மறுசீரமைப்புடன் கூடிய தொடர்ச்சியான முன்னேற்றம் அவசியம் என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.**

மிகவும் சவால்மிக்க இந்தப் பாதையில் இருந்து ஏதேனும் விலகல் ஏற்பட்டால் அது நிதியியல் முறைமைக்கும், ஒட்டுமொத்த பொருளாதாரத்துக்கும் பாதிப்புகளை ஏற்படுத்தும் என்றும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி, பாதிப்புகளை முன்கூட்டியே கட்டுப்படுத்துவதற்கு வலுவானதும், பொருத்தமானதுமான கட்டமைப்பை உருவாக்குவதும், உரியநேரத்தில் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவம் அவசியம் என்றும் குறிப்பிட்டுள்ளது. (எ-இ)

## வரிப்பதிவு இலக்கம் ஒரு மாதம் ஒத்திவைப்பு

கொழும்பு, ஜன.1

வாகனப் பதிவு, வருமான உரிமம் மற்றும் சொத்துக் கொள்வனவு என்பவற்றுக்கான வரிப் பதிவு இலக்கம் பெறுவதைக் கட்டாயமாக்கும் தீர்மானத்தை அரசாங்கம் ஒத்திவைத்துள்ளது.

இந்த நடைமுறை இன்று முதல் செயற்படுத்தப்படும் என்று கூறப்பட்டிருந்த போதும், சுமார் ஒருமாத காலத்துக்குப் பிற்போடப்பட்டுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம்பலபிட்டிய தெரிவித்துள்ளார். (எ-இ)

## பணவீக்கம் அதிகரிப்பு

கொழும்பு, ஜன.1

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மதிப்பீட்டின் அடிப்படையில் கடந்த டிசெம்பர் மாதம் பணவீக்கம் 4 சதவீதமாக உயர்ந்துள்ளது.

கடந்த நவம்பர் மாதம் பணவீக்கம் 3.4 வீதமாகப் பதிவாகியிருந்தது.

அதேவேளை எதிர்காலத்தில் பணவீக்கம் பெரும் தாக்கத்தைமக்களிடையே ஏற்படுத்தும் என்று ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ-இ)

## சிற்றுண்டிகளின் விலை அதிகரிப்பு

வற்வரி அதிகரிப்பின் காரணமாக தேநீர், உணவுப்பொதிகள், சிற்றுண்டிகளின் விலை அதிகரிக்கவுள்ளது.

பால் தேநீர் ஒன்றின் விலை 10 ரூபாவும், சாதாரண தேநீர் ஒன்றின் விலை 5 ரூபாவாலும் அதிகரிக்கப்படவுள்ளது.

சிற்றுண்டிகளின் விலை 10 ரூபாவாலும், பிரைட் ரைஸ் மற்றும் கொத்து ஆகியவற்றின் விலைகள் 25 ரூபாவாலும் அதிகரிக்கப்படவுள்ளனஎன்றுஉணவக உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது. (எ-இ)

# ஜனவரியில் பொழுதுபோக்கு விழா

ஐரோப்பிய சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருகை தரும், ஜனவரி மாதத்தில் தென் மாகாணத்தை மையமாக வைத்து பொழுது போக்கு விழாவை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அமைச்சர் ஹரின் மற்றும் சாகல ஆகியோருக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்திருந்தார். ஜனாதிபதி ரணில் 2015ஆம் ஆண்டு பிரதமராகப் பதவியேற்றதிலிருந்து ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் விழாவை நடத்த முயற்சித்தார். அதை உரிய முறையில் செய்ய முடியாததால் இந்தமுறை கண்டிப்பாகச் செய்யவேண்டும் என அமைச்சர் ஹரினுக்கும் சாகலவுக்கும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார். (எ-இ)

## நாளை

02.01.2024

**செவ்வாய்க்கிழமை**

**மார்கழி 17**

சுபநேரம் : 07.30 - 08.30

ராகுகாலம் : 03.00 - 04.30

## நாளொரு நல்வார்த்தை

**மனித முயற்சிக்கு எவ்வித எல்லைகளும் இருக்கக்கூடாது.**

– ஸ்டீபன் ஹாக்கிங் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SLIC GENERAL

கனவுகளை காத்திடுவோம்,



0112 357 357
Sri Lanka Insurance
www.srilankainsurance.com

ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் 2024ம் ஆண்டில் தடம் பதிப்பது, ஸ்ரீ லங்கா இன்ஷூ
பொதுக் காப்புறுதி ஆக, மேலும் உங்களுக்கு நெருக்கமான பாதுகாப்பு மற்றும் அ
தேவையுடைய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், உங்களுக்கான காப்புறுதி தேவை

இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

# சசிகா லேணர்ஸ்

## THE SASIKA LEARNERS

அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை

தவணை முறைக்கட்டணம் மற்றும் விரைவாக சாரதி அனுமதி பத்திரத்தை பெற்றுக்கொள்ளலாம்

Reg.No: DS882

உரிமையாளரின் தொடர்புக்கு: 0777 226 247 / 077 614 0361

email: sasikadrivingschool@gmail.com web: sasikalearners.com



தலைமைக் காரியாலயம்

இல. 57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்

021 221 7678

077 949 5706 / 077 320 8883

யாழ் மத்தி (Town)
T.P: 021 222 8004
077 998 6247
074 254 2264

கச்சேரி நல்லூர் வீதி (யாழ்ப்பாணம்)
T.P: 021 221 7578
077 434 3149
077 990 5414

நெல்லியடி
T.P: 021 226 0999
077 261 2446

மல்லாகம்
T.P: 021 224 3393
077 343 6622

புன்னாலைக்கட்டுவன்
T.P: 021 224 5001
076 384 96


பண்டத்தரிப்பு
T.P: 021 225 2333
077 434 3798

வேலணை
T.P: 021 221 5472
077 368 9319



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



## தர்மகுலசிங்கம் சுரேஷ்

தோற்றம் 08.02.1986

மறைவு 25.12.2021

திதி : அபரபட்ச சஷ்டி (01.01.2024)

பாசத்தின் பிறப்பிடமாய் பாரினில் வந்துதித்த
பாசமிகு தம்பியே பார்புகழ வாழவேண்டிய - நீ
பாதியிலே எமை பரிதவிக்க விட்டு பறந்து
- போனதேனோ
ஏக்கமுடன் நாளும் விழிகலங்கி நிற்கும் - உன்
சகோதரன் சகோதரிகளை தவிக்கவிட்டு
- சென்றது சரியோ

பாசமுள்ள மாமாவே பாரில் நாம்
ஏற்றமுற வாழ வேண்டுமென ஏணியாய் இருந்தீர்கள்
பாதிவழியில் உங்களை காலன் காவு கொண்டு
போன செய்தி இடியாய் தலையில் இறங்கியதே
இனி எப்பிறப்பில் ஆசை மாமாவின் திருமுகம்
- காண்போம்

(CS 53350)(K-1)

**குடும்பத்தினர்.**

அன்பர்கள் நண்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய புதுவருட நல் வாழ்த்துக்கள்

எதிர்வரும் தைத்திருநாளை முன்னிட்டு...

புத்தம் புதிய தெரிவுகளுடன்

## வாணி ரெக்ஸ்



- திருமண பட்டுச்சாறி வகைகள்
- பூப்புனித நீராட்டு விழா சாறி வகைகள்
- பிறந்த நாள் விழாக்களுக்கான பாட்டி புறக் மற்றும் மொடல் கவுண் புதிய தெரிவுகள்
- அரச, தனியார் ஊழியர்களுக்கான ஒரே நிறத்திலான சாறி வகைகள்
- இந்தியாவில் இருந்து உடனுக்குடன் வெளிவந்த ஒன்லைன் சாறி வகைகள்
- புதிய வகை சல்வார் / லெகங்கா / மஸ்தானி ஆடை வகைகள்
- ஆண்களுக்கான அனைத்து வகையான புதிய வகை ஆடைகள்
- சிறுவர்களுக்கான ஆடைகள்

அத்துடன்.....

வெளிநாட்டிற்கு செல்பவர்களுக்கான தரமான



- *Jacket* (ஆண் / பெண் / சிறுவர்கள்)
- கோட் சூட் (ஆண் / பெண்)
- *Sweatter* வகைகள
- பிளாங்கற் வகைகள்
- *Cap* / மௌப்ளர்
- *Luggage Bag*

அனைத்தையும் **விசேட விலைக்கழிவில்** பெற்றுக்கொள்ளலாம்

**வாணி ரெக்ஸ்**

No-81, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

021 222 5578, 021 222 9286, 077 748 8093

# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அல்பிறெட் ரவிராஜ்

பிறப்பு 06.10.1994

இறப்பு 01.01.2018



உன் நினைவு கொண்ட எம் குடும்பத்திற்கு
உன்பதில் என்ன கூறபோகிறாய்?
நீயின்றி கடந்தோடிய வேதனை காலங்களை
உன்னுடனான பாசமான காலங்களாக,
எப்போது மீட்டுத்தருவாய்?
இன்றும் ... என்றுமே .... உன் இழப்பை
ஈடுசெய்யாது தவிக்கின்றோம் ...
ரவிராஜ்ஜே!

**ராசு சுதன்**

பிறப்பு 25.07.1983

இறப்பு 01.01.2018

ஈச்சமோட்டை

குடும்பத்தினர்

# நினைவஞ்சலி

(01.01.2024)



மறைவு 01 . 01 . 1985

மறைவு 24 . 04 . 1987

## திரு. திருமதி ஏபிரகாம் மாணிக்கம்

(6/1 மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம்)

(சிறைச்சாலைகள் முன்னை நாள் மேற்பார்வையாளர் - வெலிக்கடை/ போஹம்பரை / யாழ்ப்பாணம்)

தெய்வங்களே உங்கள் பாதம் பணிந்து ஆசி வேண்டுகின்றோம்.

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மாநகரசபையி

## 01.01.1949 - 01.0



### வாழ்த்துச்செய்தி

யாழ்ப்பாண மாநகர ஆட்சி மன்றம் இன்று தனது பவளவிழாவினை அடைந்திருப்பதையிட்டு மகிழ்வடைகின்றோம். மக்களின் தேவைகளை உணர்ந்து பல வழிகளில் மாநகர ஆட்சி மன்றம் 75 வருடங்கள் யாழ்ப்பாண மக்களிற்கு தேவையான அனைத்து விடயங்களையும் செயற்படுத்தி ஏனைய மாநகராட்சி மன்றங்களிற்கு முன்னுதாரணமான பணிகளை செய்கின்ற செயல் வடிவங்களைக் கொண்டது. குறிப்பாக சைவ சமய விவகாரக்குழு அமைத்து சமய மத வேற்றுமையில்லாமல் அனைத்து மத சேவைகளையும் செய்து கொண்டிருக்கின்ற சமய சபையாகும். இப்பணிகளில் ஈடுபடுகின்ற பணியாற்றுகின்ற உத்தியோகத்தர்கள் அனைவரையும் வாழ்த்தி பாராட்டுகின்றோம். நகரத்தினை அழகுபடுத்தி சிறப்பு செய்ய இறையருளை சிந்திக்கின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.....

**இரண்டாவது குரு மஹாசந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.**



### வாழ்த்துச்செய்தி

யாழ்ப்பாணம் மாநகர சபையின் பவள விழா நடைபெறுகின்ற நிலையில். அதற்கென வாழ்த்துச் செய்தியொன்றினை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

1861ஆம் ஆண்டில் வீதிக் குழு என அழைக்கப்பட்ட ஓர் அமைப்பு உள்ளூராட்சிச் சபையைப்போன்றதொரு தோற்றத்தில் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டிருந்தது. பின்னர் இது 1921ஆம் ஆண்டில் நகரப் பகுதிச் சபை எனவும். அதன் பின்னர் 1940ஆம் ஆண்டில் இது நகரசபையாகவும். 1949ஆம் ஆண்டில் மாநகர சபையாகவும் மாற்றம் கண்டுள்ளது.யாழ்ப்பாணப் பிரதேசத்தின் மண்ணைப் பிரதி பலிக்கின்ற மரத்தினால் செய்யப்பட்ட யாழ் சின்னத்தைக் கொண்ட யாழ்ப்பாண மாநகர சபையின் கட்டிடம் ஏற்கனவே யாழ்ப்பாணம் கோட்டைப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. உள்நாட்டில் ஏற்பட்டிருந்த அழிவு யுத்தம் காரணமாக இக்கட்டிடம் முற்றாக அழிக்கப்பட்டு விட்டது. அது மட்டுமல்லாமல் மூன்று மேயர்களையும் இந்தபயங்கரவாதம் பலி கொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதன் பின்னர் முதலாவதாக 2009ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 08ஆந் திகதி மேற்படி மாநகரசபைக்கான தேர்தல் நடத்தப்பட்டது. அப்போது நாம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் மொத்தமாக 23 இடங்களில் போட்டியிட்டு. 13 இடங்களில் அமோக வெற்றி பெற்று ஆட்சி நிர்வாகத்தைப் பொறுப்பேற்றிருந்தோம். அப்போது. திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா அவர்கள் மேயராக நியமிக்கப்பட்டார்.

எமது ஆட்சி நிர்வாக காலத்தில். தற்போது தற்காலிகமாக இயங்கி வருகின்ற யாழ்ப்பாண மாநகர சபையின் கட்டிடத்தை ஏற்கனவே அக் கட்டிடம் அமைந்திருந்த யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியிலேயே மீள நிர்மாணிப்பதற்கான முயற்சிகளை எடுத்திருந்தோம். அது இன்று சாத்தியமாக்கப்பட்டு வருகின்றது. நல்லூர் பகுதியிலே அமையப்பெற்றுள்ள சங்கிலிய மன்னரின் சேதமடைந்திருந்த சிலையினை புனரமைத்து. திறந்து வைத்தோம். அத்துடன் எமது பண்டைய மன்னர்களான எல்லாளன். பரராஜசேகரன். பண்டாரவன்னியன் ஆகியோரது சிலைகளை யாழ்ப்பாண மணிக்கூட்டுக்கோபுரத்தை சுற்றிலுமாக அமைத்தோம். யாழ் நங்கையின் சிலையினை பண்ணைச் சந்தியில் அமைத்தோம். எமது சமூகத் தலைவர்களது வேண்டுகோளுக்கிணங்க நாவலர் மண்டபத்திலே வைக்கப் பட்டிருந்த ஆறுமுகநாவலரின் திருவுருவச்சிலையினை நல்லூர் ஆலயச்சூழலில் பிரதிஸ்டை செய்து வைத்தோம்.

யாழ்ப்பாணம் நகரத்திற்கு போதிய வசதிகள் கொண்ட கலாச்சார நிலையமொன்றின் தேவை கருதி. இந்திய உதவியுடன் அதற்கான பணிகளை ஆரம்பித்திருந்தோம். அது இன்று கம்பீரமாக எழுந்து நிற்கின்றது.

கோம்பயன்மணல் மயானத்தில் மின்சக்தி எரியூட்டி அமைக்கப்பட்டது. பண்ணைப்பகுதியில் கடற்கரையோர பூங்காவுடனான நடைப்பயிற்சிப்பாதை அமைக்கப்பட்டது. பழையபூங்கா சிறுவர் பூங்காவாகவும். பொழுதுபோக்கு இடமாகவும் மாற்றியமைக்கப்பட்டது. இப்படிப் பல ............

இது போன்ற மக்கள். சமூக நலன்கள் சார்ந்து நாம் பல பணிகளை ஆற்றியிருந்தோம். தொடர்ந்து எம்மால் 05 வருடங்கள் இந்த மாநகர சபையின் ஆட்சி நிர்வாகத்தினை முன்னெடுக்க முடிந்திருந்தது.

அதன் பின்னர் நடத்தப்பட்ட தேர்தலில் எந்தக்கட்சியும் பெரும்பான்மை பெறாத நிலையில். கூட்டுச் சேர்ந்து ஆட்சி அமைத்தவர்களால் தொடர்ந்து அதன் நிர்வாகத்தை முன்னெடுக்க முடியாமல். அவர்கள் மாறி. மாறி எமது உதவியையே நாடவேண்டிய நிலை ஏற்பட்டிருந்ததையும் எமது மக்கள் அறிவார்கள்.

இன்று இந்த மாநகரசபையின் பவள விழா கொண்டாடப்படுகின்றது. யாழ்ப்பாணம் மாநகர சபை கடந்து வந்துள்ள பாதை மிகவும் கடினமானது. தற்போது. ஆணையாளரின் கீழ் இது செயற்படுத்தப்பட்டு வருகின்றது. அவரும் தன்னால் இயன்ற அளவில் அதன் நிர்வாகத்தை முன்னெடுத்து வருகின்றார்.

அந்த வகையில் யாழ்ப்பாண மாநகர சபையின் வளர்ச்சியில் பங்கெடுத்த. பங்கெடுத்து வருகின்ற அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதே நேரம். யாழ்ப்பாணம் மாநகர சபைக்கென உயிர்த்தியாகம் உட்பட பல்வேறு தியாகங்களைச் செய்தவர்களையும் இன்றைய நாளில் நினைவு கூருகின்றேன்.

**திரு. டக்ளஸ் தேவானந்தா (பா.உ)**
கடற்றொழில் அமைச்சர்,
செயலாளர் நாயகம் - ஈ.பி.டி.பி.



### இன்று யாழ் மாநகரத்தின் பவளவிழா

யூலை 1906 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபையாக ஆரம்பிக்கப்பட்டு பல கட்டங்களையும் கடந்து 1949 ஆம் ஆண்டு யாழ் மாநகரசபையாக உயர்த்தப்பட்டு இன்று அதன் 75 ஆவது பவளவிழாவினைக் கொண்டாடும் யாழ் மாநகர சபையை முன்னாள் முதல்வர் என்றவகையில் வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

அத்துடன் இதனை ஆரம்பிப்பதற்கு வித்திட்டவர்களை நன்றியுடன் நினைவு கூர்கின்றேன். அவர்களின் பணி தொடர்ந்து எம் மக்களுக்கு கிடைக்க இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**திரு. செல்லன் கந்தையன்** முன்னாள் முதல்வர்.
மாநகர சபை.
யாழ்ப்பாணம்.



### வாழ்த்துச்செய்தி

யாழ் மாநகர மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யவும் யாழ் நகரைச்சுத்தமாகப் பேணவும் 01.01.1949இல் ஸ்தாபிக்கப்பட்ட யாழ் மாநகர சபையானது 01.01.2024இல் பவள விழாவை கொண்டாடுகின்றது. பவள விழா காணும் யாழ் மாநகர சபையானது பல இன்னல்லான காலங்களிலும் தன்னாலான மக்கள் சேவையை ஆற்றியது என்பது நாம் அனைவரும் அறிந்ததே. தென்னிலங்கையிலிருந்து யாழ் நகர் வருகின்ற மக்களின் தேவைகளையும் ஸ்ரீ நாக விகாரையுடன் இணைந்து மிகச்சிறப்பாக மேற்கொண்டு வருகிறது. இனிவரும் காலங்களிலும் சகல வளங்களையும் பெற்று சிறப்பாகச் சேவையாற்ற வேண்டும் என புத்ததர்மத்தில் ஆசீர்வாதம் செய்கின்றேன்.

**விகாராதிபதி,வண.கலைமாணி மீஹாஹயன்துரே சிறிவிமல தேரர்,**
தலைவர்.ஸ்ரீ நாகவிகாரை சர்வதேச பௌத்த நிலையம். யாழ்ப்பாணம்.



### வடமாகாண கௌரவ ஆளுநரின் வாழ்த்துச்செய்தி

1861ம் ஆண்டு வீதிக்குழு என உருவாக்கப்பட்ட அமைப்பானது 1898ல் உள்ளூராட்சி சபையாகவும் 1940ம் ஆண்டு நகரசபையாகவும் மாற்றப்பட்டு 1949ம் ஆண்டு யாழ்ப்பாண மாநகரசபையாக தரம் உயர்த்தப்பட்டு தற்போது யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதியையும் நல்லூர் தொகுதியின் ஒரு பகுதியையும் உள்ளடக்கி 27 தனி வட்டாரங்களை நிர்வாகம் செய்து வரும் அலுவலகமாக திகழ்கின்றது.

பல சிறப்பான மாநகர முதல்வர்களாலும் ஆளுமைமிக்க ஆணையாளர்களாலும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளாலும் ஆளுமைமிக்க அரச அலுவர்களையும் உள்ளடக்கி சமூகநலன்கள் மற்றும் மக்களின் மேம்பாட்டிற்காக ஆற்றல்மிக்க பணிகளை தொடர்ந்து சிறப்பாக ஆற்றுவதுடன் பல சவால்களையும் இடர்களையும் களைந்து யாழ் நகரின் மத்தியில் தளராத சேவையினை வழங்கிவருகின்ற வடக்கு மாகாணத்தின் ஒரேயொரு மாநகரசபையானது 75 ஆண்டுகளை நிறைவுசெய்து பவளவிழா காணபதில் பெருமிதம் கொள்கின்றேன். இலங்கை திருநாட்டின் சிறப்புமிக்க மாநகரசபையாக செயற்பட்டு யாழ் நகரினை அழகுமிக்க தூய நகரமாக பேணுவதுடன் மேலும் சமூக மேம்பாடு. நல்லிணக்கம். மற்றும் உலகமயமாக்கலுடன் எதிர்காலசந்ததியினரின் சுபீட்சமான வாழ்விற்கு தளமிடும் வகையில் பணிகளை விரிவாக்கி வளமான சேவையினை தொடர்ந்தும் எம்மக்களுக்கு வழங்க வாழ்த்துகின்றேன். இவ்விழாவிற்கான ஆக்கப்பணிகளில் சேவையாற்றியோருக்கும் நிகழ்வுகளை ஒழுங்கமைத்தவர்களுக்கும் பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்வதுடன் இவ்விழா சிறப்புற நிகழ்வதற்கும் இறையாசிகளுடன் கூடிய நல்வாழ்த்துக்களை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ்,** ஆளுநர். வட மாகாணம்



### பவளவிழா வாழ்த்துச்செய்தி

யாழ் மாநகரசபையானது 01.01.1949 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டு 01.01.2024 இன்று பவளவிழாவினைக் கொண்டாடும் நாளில் எனது நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மிக்க உவகையடைகின்றேன். புதிய யாழ்ப்பாணத்தைக் காணவேண்டும் என்ற மக்களின் ஒன்றுபட்ட பார்வை நிறைவேறுவதற்கு யாழ் மாநகர சபையின் தொடர்பணிகள். உதவிகள். பங்களிப்புக்கள். முயற்சிகள் அளப்பரியன.

மாநகர வடிகால் அமைப்பினைப் பராமரித்தல். கழிவகற்றல். முகாமைத்துவம். ஆரம்ப சுகாதார நலநோன்பு பணிகள். தீயணைப்பு மற்றும் நோய்க் கட்டுப்பாடுகள். நல்லூர் ஆலய மகோற்சவ காலங்களில் மேற்கொள்ளப்படும் அதிசிறப்புப் பணிகள் மற்றும் எமது மண்ணின் வாசனையை எடுத்தியம்பும் பண்பாட்டுக் கலாசார நிகழ்வுகள் என பலவற்றை வரிசைப்படுத்த முடியும். உலகத் தமிழ் மக்களின் புலமைச் சொத்தாகக் கருதப்படும் யாழ் நூலகத்தினை சிறப்பாக பேணுதலும் யாழின் மிக உயர்ந்த கட்டடமாகத் திகழும் யாழ்ப்பாண கலாசார நிலையத்தினை கையேற்று சிறப்புற நிர்வகிக்கும் ஆரம்ப நடவடிக்கைகளையும் எடுக்கும் முயற்சிகளும் பாராட்டுக்குரியன. மேலும். மிக உன்னத கட்டடக் கலைநுட்பங்களுடன் அழகுற வடிவமைக்கப்பட்டு அமைக்கப்பட்டுவரும் யாழ மாநகரசபைக்கான நிரந்தர கட்டடத்தில் இப்பவள விழா ஆண்டில் உங்கள் பணிகளை தொடங்கவும் இன்னும் யாழ் மாநகர மக்களுக்காக சீரிய பணிகளாற்றி சாதனைகள் பல படைத்திடவும் மாநகர சபையினால் மேற்கொள்ளப்படும் எல்லா முயற்சிகளும் வெற்றி பெறவும் எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்.

**திரு. இ.வரதீஸ்வரன்,** செயலாளர். உள்ளூராட்சி அமைச்சு. வடமாகாணம்.



### பவளவிழா வாழ்த்துச்செய்தி

யாழ்ப்பாண மாநகர சபையின் பவளவிழா நடைபெறும் வேளையிலே இதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். நமது பாரம்பரியத்திலே பவளவிழா ஏன் கொண்டாடப்படுகின்றது? ஏன் கொண்டாடப்பட வேண்டும் என்ற சிந்தனை என் மனத்திலே நிழற்படமாக நகர்கின்றது.

ஒரு தனிமனிதனின் வாழ்க்கை அல்லது ஒரு நிறுவனத்தின் பயணத்தில் ஒவ்வொரு வருடமும் முக்கியமானவை. பிறந்தது முதல் இன்று வரை எமது வாழ்க்கைப் பயணம் எப்படி அமைந்தது என்று எண்ணிப் பார்ப்பதிலே ஒரு சுகம் உண்டு. கண்ணீரும். புன்னகையும் கலந்த காலங்கள் தென்றலும். புயலும் வீசிய காலங்கள். கடும் மழையும் கொடும் பனியும் கழிந்த காலங்கள் என்பது மனித வாழ்வியலுக்கும். நிறுவனப் பயணத்திற்கும் பொருந்தும். நான் நிறுவனத்தையே நினைத்துப் பார்க்கின்றேன். தனிமனித வாழ்வைச் சரிதம் என்பர். நிறுவனத்தின் பயணத்தைச் சரித்திரம் என்பர். சரிதம் வேறு. சரித்திரம் வேறு. இன்று எமது மாநகர சபை எழுபத்தைந்தாவது அகவையிலே கால்பதித்து நடைபயில்கின்றது. எமது பண்பாட்டிலே இருபத்தைந்து (வெள்ளி விழா). ஐம்பது (பொன்விழா). அறுபது (மணிவிழா). எழுபத்தைந்து (பவள விழா). எண்பது (அமுதவிழா). நூற்றாண்டு விழா என்பவை சிறப்புறக் கொண்டாடப்படுவது வழக்கம். நிறுவனங்களைப் பொறுத்தவரை பெரும்பாலும் நூற்றாண்டு விழாவையே சிறப்பாகக் கொண்டாடுவர். இப்பொழுது இருபத்தைந்து தொடக்கம் எழுபத்தைந்து வரை நிறுவனங்களும் தனி மனிதர்களும் சிறப்பாக விழாக்களைக் கொண்டாடுகின்றனர்.

நிறுவனங்களைப் பொறுத்தவரை இவ்விழாக்கள் மிகவும் முக்கியமானவை என்பது எனது அபிப்பிராயம். இந்த விழாக்களினாலே பல நன்மைகள் இருந்தபோதிலும் இரண்டு நன்மைகள் மிகவும் பிரதானமானவை. ஒன்று: நிறுவனம் இவ்வளவு காலமும் பயணித்த பாதையை அளந்து பார்க்கும் (மதிப்பீடு செய்யும்) வாய்ப்பு இவ்விழாக்களினூடு கிடைக்கும். விமர்சன ரீதியிலே கடந்த காலச் செயற்பாடுகளை அணுக முடியும். இரண்டு: இனிவருங்காலங்களிலே நாம் எப்படிப் பணியாற்ற வேண்டும்? எப்படிப் பயணிக்க வேண்டும் எனத் தீர்மானித்துச் செயற்பட உதவும். யாழ்ப்பாணம் தொன்மை வாய்ந்த நகரம். 12 ஆம் நூற்றாண்டில் இருந்து 16 ஆம் நூற்றாண்டு வரை தனிமையான ஆட்சிக்கு உட்பட்டிருந்த பிரதேசம். எனவே. இதன் தொன்மையைப் பேணும் வகையிலும் புதியவற்றைப் பொருத்தம் நோக்கி ஏற்கும் வகையிலும் செயலாற்ற வேண்டியது காலம் எமக்குக் கற்பித்த பாடமாகும். யாழ் மாநகரசபையின் உரிமையை நிலைநாட்ட அரசியல் தலைவர்கள். உத்தியோகத்தர்கள். பொதுமக்கள் எனப் பலரும் உயிர்த்தியாகங்களை இம் மண்ணுக்காக அர்ப்பணித்துள்ளார்கள் அவர்களையும் இவ்வேளையில் நினைவு கூருகின்றேன்.

**திருமதி ப.யோகேஸ்வரி,** முன்னாள் முதல்வர். மாநகரசபை. யாழ்ப்பாணம்




### பவளவிழா வாழ்த்துச்செய்தி

யாழ் மாநகர சபையானது மாநகர சபை கட்டளைச் சட்டம் 17 க்கு அமைவாக 1949 ஆம் ஆண்டு மாநகர சபையாக நிறுவப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை பல துன்பங்களையும் துயரங்களையும் எதிர் கொண்டு கம்பீரமாக யாழ் மக்களுக்கு சீராகவும் சிறப்பாகவும் செயல்பட்டு இன்று 75 வருடங்களை பூர்த்தி செய்து தனது இடையறாத சேவையினை தொடர்ந்தும் நல்கி வருவதையிட்டு நாம் பெருமை கொள்ள வேண்டியதாயுள்ளோம்.

இலங்கை வரலாற்றில் 1865- 1872 வரையான காலப்பகுதியில் சேர் கேக்கியூலஸ் (Sir Hercules) மற்றும் தொடர்ந்து லோட் றொஸ்மீட் (Lodr Rosemead) அவர்களால் கண்டிக்கான தொடருந்து பாதை திறக்கப்பட்டதன் பின் அவர்களால் முதன் முறையாக உருவாக்கப்பட்ட மாநகரங்களாக கொழும்பு, கண்டி, மற்றும் காலி மாநகரங்கள் மக்கள் பொதுப் பணிக்காகவும் நாளாந்த இதர சேவைகளுக்காகவும் அமையப்பெற்றது பின்னர் இலங்கையின் நான்காவது மாநகரமாக " யாழ் மாநகரம் " 1949 ஜனவரி 01 இல் உருவாக்கப்பெற்றது.இது ஒரு மகிழ்ச்சியான காரியமாகும். இச் சபையானது எதிர்காலத்தில் மக்கள் பிரதிநிதிகளால் சீராகவும் சிறப்பாகவும் செயல்பட வேண்டும் என்பதே எமது விருப்பாகும். இவ் விடயம் கூடிய விரைவில் நிறைவேறும் என்பதை இப் பவள விழாவில் வலியுறுத்தி நிற்கின்றேன். இவ்வேளையில் மாநகர சபை ஆணையாளர் திரு த.ஜெயசீலன் அவர்களால் இப்பவளவிழா சிறப்பாக முன்னெடுக்க பூரண ஆதரவு வழங்குவது வரவேற்கத்தக்க செயலாகும். சீரிய பண்பும் கடமையுணர்வும் பக்தி நெறியும் ஒன்றுபடும் போது அனைத்தும் சீராக அமைகிறது. எனவே ஆணையாளரின் முயற்சியும் அவரின் உத்தியோகத்தர்களின் பூரண பங்களிப்புடனும் இப் பவள விழாவினை சிறப்பிக்க வேண்டும் என வாழ்த்தி நிற்கின்றேன்.

**திரு. இம்மானுவல் ஆனல்ட்,** முன்னாள் முதல்வர்,
மாநகர சபை. யாழ்ப்பாணம்.



**யாழ் மாநகர சபையின் சுருக்க வரலாறு**

15 ஆம் நூற்றாண்டு காலத்தில் நல்லூரைத் தலைநகராக
சங்கிலி மன்னன் காலத்திலிருந்தே இலங்கையின் முக்கிய ந
விளங்கியுள்ளது. ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் 1861 ஆ
(Road Committee) என அழைக்கப்பட்ட உள்ளூராட்சிச் ச
அமைப்பு யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டது.

பின்னர். 1898 ஆம் மற்றும் 1906 ஆம் ஆண்டில் இயற்
சட்ட விதிகளுக்கு அமைய முதலாவது உள்ளூராட்சிச் சபை (Lo
1921 ஆம் ஆண்டில் இது . நகரப்பகுதிச் சபை (Urban District C
1940 இல். நகரசபையாகவும் தரம் உயர்த்தப்பட்டது. 1947
இலக்கம் கொண்ட மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் ஏற்ப
அன்று ஸ்தாபிக்கப்பட்டது.

மேற்கு ஐரோப்பிய ஆட்சிக்காலத்தில் யாழ் நகரத்தினை
மண்டபக் கட்டடம் 1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கை
போர் காரணமாக முற்றுமுழுதாக அழிந்துவிட்டது. அதன் பின்
கட்டடம் நல்லூர்ப் பகுதியில் தற்காலிகமாக அமைந்துள்ளது.
புதிதாக நகரமண்டபம் அமைப்பதற்காக 07.09.2019 அடிக்கல்
நடைபெற்றுக்கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.



### வடக்கு மாகாண உள்ளூராட்சி
### வாழ்த்துச் செய்

வடக்கு மாகாணத்தில் ஒரே ஒரு மாநகரசபையாக விளங்
01.01.1949 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டு 2024 ஆம் ஆண்டில் ப
இதழுக்கு வாழ்த்துரை வழங்குவதில் நான் பேருவகை அடைகிறே

யாழ் மாநகர சபையின் 75 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இ
உறுதுணையாக இருந்த பெருமதிப்பிற்குரிய பொதுமக்கள். அலுவலர்கள் மற்றும் நல
வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கடந்த ஏழரை தசாப்தங்களாக. பொதுமக்களின் நலனுக்கான உறுதிப்பாடு. சமூக
அர்ப்பணிப்பு ஆகியவற்றின் அடையாளமாக திகழ்ந்து யாழ்ப்பாண மக்களின் இதயங்க
பவளவிழாவைக் கொண்டாடுவதற்கிடையில் பல சாதனைகளை நிறைவேற்றியுள்ள
தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கு நாமும் பங்காற்றுவோம்.

யாழ் நகர பங்களிப்பாளர்களின் அயராத உழைப்பு. யாழ்ப்பாண மாநகரச
இடமின்றி முக்கிய பங்கு வகிக்கிறது.

யாழ் மாநகரசபையானது புதிதாக நவீனமயப்படுத்தப்பட்ட சகல வசதிகளுடன்
சேவையினை மேலும் மெருகூட்டுவதற்கு புதிய இடம் நோக்கி நகரவுள்ளமை குறிப்பிட
யாழ் மாநகரசபை மேன்மேலும் சாதனைகள் பல படைத்து முன்னேற்றம் அ
வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

உள்ளூராட்சி ஆணை



### பவள விழா வாழ்த்துச்

1949 ஜனவரியில் ஸ்தாபிக்கப்பட்ட இவ் யாழ்ப்பாணம் மாநகர
தனது 75 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து தனது பவளவிழாவைக்
இதற்கு முன்னாள் முதல்வர் என்ற வகையில் எனது வாழ்த்துச்
பெருமகிழ்வு அடைகின்றேன்.

வடமாகாணத்தின் ஒரே ஒரு மாநகர சபையாகவும். இலங்கையில் முதன்மு
ஒன்றாகவும் விளங்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை தனது காலத்தில் யுத்தத்தால் பேர
தனக்குரிய மிடுக்குடன் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இம் மாநகர சபைக்கு 30.12.2020 தொடக்கம் 30.12.2022 வரையான கா
செயற்பட்டு யாழ் மாநகர மக்களுக்கு சேவையாற்றக்கிடைத்தமை எனது வரலாற்
எனக்களித்த இறைவனுக்கு நன்றிகள்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட சபை இருந்த காலத்திலும் சரி. தற்போதைய மக்க
மக்களுக்கு வீதிகள். சுகாதாரம். வடிகால். வீதி விளக்குகள். நூலகங்கள். பொதுப்பூ
வசதிகள் போன்ற பல பொதுச்சேவைகளை சிறப்புற வழங்கி வருவதுடன். இச் சேவைக
தப்பட்ட நிலையில் மக்களுக்கு ஆற்றி மக்களின் வாழ்வின் மேம்பாட்டிற்கு ஏற்ற வகை
யுத்தத்தினால் அழிக்கப்பட்ட நகர மண்டபமானது மிகுந்த மிடுக்குடன் புதிதாக அமை
விரைவில் அதன் கட்டுமானப் பணிகள் நிறைவு பெற்று மாநகர சபையின் செயற்பாடுகள்
எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாந

**மாநகரசபை**
**யாழ்ப்பாணம். - 01.01.20**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் ஆண்டு நினைவு தினம்

தோற்றம் 03 . 04 . 1938

மறைவு 01 . 01 . 2021



## பிரான்சிஸ் வின்சென் டீ போல்

(வித்தியா காருண்யன்)

பண்பிலும் பாசத்திலும் ஒளிவிளக்காய்
பாரே போற்றும் பண்பாளனாய்
மக்களுக்கு எல்லாம் தலைவனாய்
தரணி போற்றும் தந்தையாய்
எம் உறவுகளுக்கெல்லாம் ஐயாவாய்
தோளோடு துணைநின்று எம்
அனைவருக்கும் வழிகாட்டினீர்கள்

இறைபணியிலும் கல்விப்பணியிலும்
அரசியலிலும் சமூகத்திலும் என நீர்
தடம்பதிக்காத இடங்களே இல்லை
சிறந்த சமூக சேவையாளன், வித்தியா காருண்யன்
எனப் பெயர்மகுடம் சூடி
எம்மவர்க்கு எல்லாம் எடுத்துக்காட்டாய்
நானிலம் போற்ற வாழ்ந்தவர் நீங்கள்.

வருடம் மூன்று முடிந்தாலும்
உம்பெயர் உச்சரிக்காது
எம் நாள்கள் கடந்ததே இல்லை
விண்ணகத் தந்தையின் இல்லத்தில்
அழியா இன்பத்தைப்பெற்று மிளிர
உமக்காய் இறைவனை மன்றாடி
இம் மலரும் ஆண்டிலும்
உம் பாதம் பணிகின்றோம்.

றோஸ் கொட்
கடற்கரை வீதி, முனை- பருத்தித்துறை.

நீங்கா நினைவலைகளுடன்
குடும்பத்தினர்
021 226 3129

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 31 . 12 . 1959

உதிர்வு 11 . 01 . 2023



தொல்புரம் மத்தியைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்


## செல்லையா பரமேஸ்வரி (கமலா)

அன்பையும் அரவணைப்பையும் எம் மீது கொட்டி எமக்கு
எல்லாம் வழிகாட்டியாய் இருந்த அம்மாவே!
அன்பான வார்த்தையையும் உன் அழகிய புன்னகையும்
எண்ணி எண்ணி அடங்கவில்லையே!
ஓராண்டு என்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும்
உம் நினைவுகள் எம்மை விட்டு என்றும் பிரியாது
நாட்கள் வாரங்கள் ஆகி வாரங்கள் மாதங்கள் ஆகி
மாதங்கள் வருடம் ஆகியும் தாங்காத வேதனையில்
தாளாமல் தவிக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மகன்

(cr.41426) (N.1)

# 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் S.K. தியாகராசா

(தியாகு)

(பிரபல புகையிலை வர்த்தகர்)

தோற்றம் 01.01.1943

மறைவு 01.01.2009

அன்பின் திருவுருவே அப்பா!
எங்கள் பாசத்தின் உறைவிடமே
எத்தனை காலங்கள் போனாலும்
மறப்போமா உங்களை
எங்கள் மனதில் குடிகொண்ட தெய்வமே
உங்கள் அன்பு உருவம் என்றும் மாறாது
எம் இதயத்தில் உங்கள் நினைவுகளை
சுமந்து வாழ்கின்றோம்

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி!

நிரந்த முகவரி:
தன்னை, களபூமி,
காரைநகர்.

தற்காலிக முகவரி:
இல.58, மானிப்பாய் வீதி,
ஆறுகால் மடம்.
077 183 6625

உங்கள் நினைவுகளுடன்
என்றும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ய நிறுவனத்தின் மூலம் விசிட் விசா (Visit Visa) பெறுதற்கு விண்ணப்பித்து
## ந்த 3 மாத காலத்தில் விசா கிடைக்கப்பெற்றவர்களை வாழ்த்துகின்றோம்.
## றுகிய காலத்தில் கனடாவுக்கு கூடுதலான Visit Visa க்களை பெற்றுக்கொடுத்த நிறுவனம்



தனுசிகா சி. (மாதகல்) | க.தினேஸ் சுதன் (வல்வெட்டி) | டிசாந்தரூபன் வரதராசா (வட்டு) | டிதர்சன் உதயகுமார் (ஆவரங்கால்) | எ.சா.சாலமன் (உரும்பிராய்) | எFலின் டினோசி செ. (கோப்பாய்) | இ.லக்ஷ்மன் சாம் (கொழும்பு) | ஈவொன்சி டிலுசியா (அரியாலை) | ரு. ஜனார்த்தனன் (நீர்வேலி)



ஜே.ஜோன்சன் (ஆனைக்கோட்டை) | ஜெதுர்சன் சி. (முழங்காவில்) | ஜெயக்குமார் ப. (அளவெட்டி) | ஜெயசாந் ஜெ. (தொண்டமானாறு) | கஜன் செ. (ஆவரங்கால்) | கஜந்தன் பே. (புத்தூர்) | கஜந்தி சுரேஸ் (உடுப்பிட்டி) | க.நிருஷா (சங்கானை) | க.வசந்தமாலா (விசுவமடு)



கி. புவன் (வவுனியா) | க. தமாஷினி (வவுனியா) | கோ.கோமதி (சிலாபம்) | குகராம் வை. (கிளிநொச்சி) | குகதாசன் ஆ. (புன்னாலைகட்டுவன்) | குலேந்திரம் கனகரத்தினம் | கு.வனஸ்வதி (அச்சுவேலி) | கு.மோகனதாஸ் (கரவெட்டி) | லாகினி கிரிதுமார் (உடுவில்)



நா.வரதலஷ்மி (காரைநகர்) | ந.நிலோஷா (நீர்வேலி) | நிலவன் க. (விஸ்வமடு) | நிமலன் த. (நெல்லியடி) | நிந்துஜன் ஜெ. (வவுனியா) | நி. தேனுஜா (ஆவரங்கால்) | நித்தியானந்தன் க. (நுவரெலிய) | நித்தியரூபன் த. (கொடிகாமம்) | நோபேட் ர. (சுண்டிக்குளி)



பொ.பிரதீபா (உடுவில்) | பி.அவிஷனா (நுவரெலிய) | பி.கம்ஷவி (நுவரெலிய) | பி.சஜந்தினி (நுவரெலிய) | ரா.நிஷாங்கரன் (விஸ்வமடு) | ரஜிதா கு. (விசுவமடு) | ரா.கௌசலாதேவி (PPT) | இ.சிறிதரன் (யாழ்) | ர.ஷர்மிளா (வாதரவத்தை)



ச.அபிஷேக் (நுவரெலிய) | ச.மதுஷிகன் (நுவரெலிய) | ச.சுதானந்தினி (நுவரெலிய) | ச.கஜீரதன் (நுவரெலிய) | சயந்தன் த. (வவுனியா) | செ.செல்வகுமார் (இருபாலை) | செ.லக்ஷ்மன் (இணுவில்) | செ.சந்தோஷ் (சுன்னாகம்) | ச.சபேஷ்குமார் (நீர்வேலி)



ச. தேவரூபன் (PPT) | சி.சுபாஜினி (நீர்வேலி) | ச.வசுதன் சங்கரன் (சாவகச்சேரி) | சி.ஜெயரானி (புன்னாலைகட்டுவன்) | சு.சுரேஸ் (சாவகச்சேரி) | சுதர்ஷினி ப. (சுண்டுகுளி) | திருமாள் நிருஷன் (புத்தூர்) | தனுஷியா ஜெ. (வவுனியா) | தவலோகநாதன் சத்தியசீலன்



தி.கவாஸ்கர் (புத்தூர்) | திவாகரன் சிவராஜசிங்கம் | துஷாரா அ. (அரியாலை) | துஷாரா இந்துநேசன் (வவுனியா) | துஷியந்தன் அ. (விஸ்வமடு) | துஷியந்தினி பா. (புத்தூர்) | உமையாலன் பவிரா (ஆவரங்கால்) | உ.பிரபாலினி (ஆவரங்கால்) | உமையாள் செல்லதுரை (ஆவரங்கால்)

**sultation (Pvt) Ltd.**

**805 394 (விமல்)**

**161 892 (கஷ்வின்)**

**238 045 (மீரா)**



விஷ்ணுதரன் சு.(ஆவரங்கால்) | விதுன்ராஜ் ர. (நெல்லியடி) | யோ. அபிராமி (திருநகர்) | யோ.வசந்தகௌரி (திருநகர்) | அகீஸ் துஷிதாசன் (புத்தூர்) | யோன்வாசன் (சிறுபிட்டி) | ந.வடிவாம்பிகை (அச்சுவேலி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...பயின் பவள விழாச் சிறப்பிதழ்

## 01.01.2024



தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த
...ன் முக்கிய நகரமாக யாழ் நகரப்பகுதி
...தில் 1861 ஆம் ஆண்டில் வீதிக் குழு
...ளூராட்சிச் சபையைப் போன்றதொரு

...ண்டில் இயற்றப்பட்ட 13 ஆம் இலக்கச்
...ட்சிச் சபை (Local Board) உருவானது.
...ban District Council) ஆகவும், பின்னர்
...ட்டது. 1947 ஆம் ஆண்டின் 29 ஆம்
...டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 1949.01.01

...நகரத்தினை நிர்வகிப்பதற்கான நகர
...னர் இலங்கையில் ஏற்பட்ட உள்நாட்டுப்
...து. அதன் பின்னர் குறித்த மாநகரசபை
...மந்துள்ளது. தற்போது அதே இடத்தில்
...2019 அடிக்கல் நாட்டப்பட்டு வேலைகள்
...தும்.

### ...ளூராட்சி ஆணையாளரின் ...த்துச் செய்தி

...சபையாக விளங்குகின்ற யாழ் மாநகரசபையானது
...ஆம் ஆண்டில் பவளவிழா காண்கின்றது. பவளவிழா
...கை அடைகிறேன்.

...கொண்டாடும் இவ்வேளையில், இதன் வெற்றிக்கு
...கள் மற்றும் நலன்விரும்பிகளுக்கு எனது அன்பான

...றுதிப்பாடு, சமூக உணர்வு மற்றும் அசைக்க முடியாத
...க்களின் இதயங்களில் தனி இடத்தைப் பெற்றுள்ளது.
...றைவேற்றியுள்ளது. மேலும், யாழ் மாநகரசபையின்

...ாண மாநகரசபையின் வளர்ச்சிக்கு சந்தேகத்திற்கு

...வசதிகளுடன் கூடிய நிரந்தர கட்டடத்தில் தனது
...ள்ளமை குறிப்பிடத்தக்கது.
...ன்னேற்றம் அடைய எனது மனப்பூர்வமான நல்

**திரு. செ.பிரணவநாதன்,**
...ராட்சி ஆணையாளர், வட மாகாணம்

### ...வாழ்த்துச் செய்தி

...பாணம் மாநகர சபையானது 2024 ஆம் ஆண்டில்
...வளவிழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றது.
...எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில்

...கயில் முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்ட சபைகளுள்
...யுத்தத்தால் பேரழிவைச் சந்தித்த போதும், இன்றும்

...வரையான காலப்பகுதியில் மாநகர முதல்வராகச்
...எனது வரலாற்றுப் பாக்கியமாகும். இவ்வாய்ப்பை

...ற்போதைய மக்கள் சபை இல்லாத காலத்திலும் சரி
...ங்கள், பொதுப்பூங்காக்கள் மற்றும் பொழுதுபோக்கு
...ன். இச் சேவைகளை தொடர்ந்தும் நவீன மயப்படுத்
...ற்த ஏற்ற வகையில் செயற்பட வேண்டும் எனவும்,
...புதிதாக அமைக்கப்பட்டு வரும் நிலையில் அங்கு
...ன் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்வும்,

**திரு. வி.மணிவண்ணன்**
முன்னாள் முதல்வர்.
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

...பை
...1.01.2024



### யாழ் மறைமாவட்ட ஆயரின் ஆசிச்செய்தி

யாழ்ப்பாண மாநகரசபை 01.01.1949 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டு 75 ஆண்டுகள் கடந்து தனது மகத்தான பணியை மக்களுக்கு செய்து வருகின்றது. இந்த பவளவிழா நினைவாக வெளியிடப்படுகின்ற சிறப்பிதழிற்கு வாழ்த்துச் செய்தி தருவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவர்கள் எம் மக்களுக்கு செய்துவருகின்ற மிகச்சிறப்பான பணிகள் பாராட்டத்தக்கது. வீதி அபிவிருத்தி, சுகாதாரம், வடிகால் அமைப்பு முறை, மக்களிற்கான வீட்டுத் திட்டங்கள், நூலகங்கள், பொது வெளி பூங்காக்கள், இன்னும் மக்களிற்கான பொழுது போக்குகள் போன்ற பணிகளை மக்களுக்கு சிறப்பாக செய்து வருகின்றார்கள். தொடர்கின்ற காலங்களிலும் எமது யாழ் மண்ணின் மக்களுக்காக, மக்களின் வாழ்வை வளம்படுத்துவதற்காக மென்மேலும் சிறப்பான பணிகளை செய்யவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

இந்த மாநகரசபையிலே பணிபுரிகின்ற யாழ் மாநகரசபை முதல்வர், ஆணையாளர், ஏனைய உத்தியோகத்தர்கள், எல்லோருக்கும் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் கூறிநிற்கின்றேன். தொடர்ந்தும் உங்களது பணிகள் மென்மேலும் சிறக்க வாழ்த்துக்கள் கூறி ஆசித்து நிற்கின்றேன். புத்தாண்டு நல்வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கின்றேன்.

இறைவனின் ஆசி என்றும் உங்களோடு இருப்பதாக.

**கிறிஸ்துவிலும் மரியன்னையிலும் பக்தியுள்ள**
**பேரருட்திரு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்**
யாழ் ஆயர்.



### Greeting Message on Pavala Vizha of the Municipal Council , Jaffna

The Northern Province consists with 34 Local Authorities - one Municipal Council , five Urban Councils and twenty eight Pradeshiya Sabhas are responsible for providing a variety of local public services and are functioning with the view to build the well-being of communities.

All the Local Authorities of the country are subordinate to the Central Government. The Municipal Council , Jaffna , which was the first organized Local Government for Jaffna, was established under the provision of Municipal Council Ordinance No 29 of 1947 on 01.01.1949 . Observing the records, it is able to aware the historic and powerful dominant backgrounds and had overcome several governing challenges it's pubic service pathway. With the devoted and loyal respectable elected authorities and entrusted administrative body had led the JMC as an exemplary LG during prior periods.

The Jaffna Municipal Council, the well demarcated administrative structure with numerous public services under essential sectors in the Jaffna city, is always admired among the provinces as the best public partner and service provider . Reviewing the dynamic public service tracks with guidance of noble pioneers within the administrative limits of the Municipality charged with the regulation, control and administration of all matters for 75 years , everyone is able to know the spectacular deputation and renowned reputation of Jaffna MC.

On celebrating the historic event of the JMC , my heartiest appreciations and kind regards are hereby expressed for all the pioneers , those had administered and served reliably for the operative function of JMC from its' foundation and wishes for the Commissioner and all officers, presently serving dutifully at the Jaffna Municipal Council with effective and well-intentioned public services.

**Mr. S.M.Saman Bandulasena**
Chief Secretary
Northern Province



### அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாண மாநகர சபையின் பவளவிழா கொண்டாட்டத்தில் மலரும் பவள விழா சிறப்பு விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

15-ஆம் நூற்றாண்டு காலத்தில் நல்லூரைத் தலைநகராக கொண்டு ஆட்சி செய்த சங்கிலி மன்னன் காலத்திலிருந்தே இலங்கையின் முக்கிய நகரங்களில் ஒன்றாக யாழ்ப்பாணம் விளங்கியமையும் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் 1861 இல் உள்ளூராட்சி சபையை ஒத்த அமைப்பு ஆரம்பிக்கப்பட்டதாகவும் அறியமுடிகிறது. 1940 ஆம் ஆண்டில் நகரசபையாகவும் அதன் பின்னர் 1949 ஆம் ஆண்டு மாநகரசபையாகவும் தரம் உயர்த்தப்பட்டு சிறப்பான சேவையை முன்னெடுத்து வருவதும் குறிப்பிடத்தக்கது. நகர மண்டப கட்டடத்தில் இயங்கிய மாநகர சபை 1983 ஆம் ஆண்டிலிருந்து நல்லூரில் இயங்கி வருவதும் தற்பொழுது மீண்டும் துரையப்பா விளையாட்டு மைதானத்திற்கு அருகில் தனது சொந்த நிலத்தில் புனர்நிர்மாணம் செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண நகரத்தின் வரலாற்றுப்புகழ் மிக்க யாழ்ப்பாண நூலகத்தையும் துரையப்பா விளையாட்டரங்கு, சுப்பிரமணியம் பூங்கா, பழைய பூங்கா எனப் பெயர்பெறும் சிறுவர் பூங்கா, மற்றும் ஆரியகுளம் போன்றவற்றோடு இன்னும் பல பொழுதுபோக்கு மையங்களையும் முகாமைத்துவம் செய்வதோடு மட்டுமன்றி நல்லூர் உற்சவ காலத்தில் ஆலயத்தின் வெளிப்புற சூழலை அழகுபடுத்துவதிலும், நல்லைக்குமரன் மலரினை வெளியிட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. பல்வேறு நகர அபிவிருத்தி நடவடிக்கைகளையும் காலத்திற்கு காலம் பல முன்னேற்றகரமான பணிகளையும் மேற்கொண்டு வருவதில் முனைப்பு காட்டிவரும் யாழ் மாநகர சபை யாழ் மாநகரத்தை ஒரு சிறந்த பண்பாட்டு அம்சத்துடனும் சுகாதார விழுமியங்கள். நவீன அபிவிருத்தி போன்றவற்றை முதன்மைப்படுத்தி உலகின் முன்னணி நகரங்களில் ஒன்றாக யாழ்ப்பாணத்தைக் உருவாக்கும் பெரும் பொறுப்புக்குரிய நிறுவனமாகும் என்றால் மிகையாகாது. யாழ் மாநகர சபை எதிர்காலத்தில் செயற்படுத்த வேண்டிய பணிகள் மேலும் விரிந்து கிடக்கிறது. என்பதனை நினைவுபடுத்தி பல்வேறு புத்தாக்கச் சிந்தனைகளுடன் மேலும் வளர்ச்சி பெற வேண்டுமென வேண்டுகின்றேன்.

"மனத்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனத்தூய்மை தூவா வரும்"

என்னும் வள்ளுவனின் வாக்குக்கு அமைய மனத்தூய்மையாதலும் செய்யும் தொழில் தூய்மையாதலும் ஆகிய இரண்டும் தான் சேர்ந்த இனத்தின் தூய்மையையொட்டி வரும் என்பது போல புறத்தூய்மையாக யாழ்நகரை மாநகர சபை பேணி சிறந்த சேவையை ஆற்றிவரும் இவ்வேளையில் மலரும் பவளவிழா மலர் சிறப்புடன் இதழ் விரிக்கவும், இப்பணியை திறம்பட ஆற்றிவரும் ஆணையாளர் உட்பட அனைத்து உத்தியோகத்தர், மற்றும் மலர்க்குழுவினர் என அனைவரையும் பாராட்டி என் நல்வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்கின்றேன்

**திரு. அம்பலவாணர் சிவபாலசுந்தரன்.**
அரசாங்க அதிபர்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம் .



### பவள விழா காணும் யாழ் முத்தாக முகிழட்டும்

மனித வாழ்விற்கான தேவைகள் அனைத்தினதும் திக்குகள் திருப்பங்கள் கோணங்களின் சேவைகளை திறம்பட செயற்படுத்தி அன்றாட தேவைகளின் அவசியங்களையும் அத்தியாவசியங்களையும் அழகுற செம்மைப்படுத்தி செயலாற்றும் "யாழ் மக்களுக்கோர் அத்திவாரமே" "யாழ் மாநகர சபை" ஸ்தாபிப்பு என்றால் மிகையாகாது.

இந்தச் சபை 01.01.1949 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்று பவள விழாவைத் தொட்டு நிற்கின்றது என்றால், அது, எம்மக்களுக்கு கிடைத்த ஓர் வரப்பிரசாதம். எனவே இதுவளர்ச்சியின் உயர்ச்சி எதிர்காலத்திலே பல்லாண்டுகளைத் தொட்டு யாழ் மக்களுக்கோர் நடமாடும் பல்கலைக்கழகமாக மிளிரும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

இவ்வேளையிலே சிறப்புற சேவையாற்றி அதன் தராதரத்தை தடங்கலின்றி நிறைவேற்றும் ஆணையாளரும் அவர்தம் ஏனைய செயற்படுத்துனர்கள் அனைவரும் போற்றப்பட வேண்டியவர்கள். இதே போல் இதுகால வரை செயற்பட்ட அனைவருக்கும் நன்றியறிதலை தெரிவித்து யாழ் மாநகர சபை கண்டுவிட்ட "பவளவிழா" நூற்றாண்டு விழாவைத்தொட்டு பல்லாண்டுகளாக வாழட்டும் என்று வாழ்த்துவதுடன் அதற்காக எல்லாம் வல்ல இறைவனையும் பிரார்த்திக்கின்றேன்.

வாழ்க வளமுடன்

**அல்ஹாஜ் மௌலவி ஏ.எம்.ஏ.அஸீஸ்(காஸிமி)**
யாழ் / கிளி மாவட்ட சர்வ மத தலைவர்,
அகில இலங்கை சமாதான நீதவான்,
செவலபள்ளிபேஷ்இமாம்.



### சிறப்புமிகு யாழ் நகரின் பெருமைமிகு மாநகரசபை

யாழ் நகரை நிர்வாகம் செய்துவரும் உள்ளூராட்சி அமைப்பான யாழ் மாநகரசபையானது தனது 75ஆவது ஆண்டை பூர்த்தி செய்வதனையிட்டு எனது மனப்பூர்வமான நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

யாழ் மாநகர சபையானது பொதுச்சுகாதாரம், பொதுப்பயன்பாட்டுச்சேவைகள், பிரதேச மக்களின் பொதுநலவசதிகளை செவ்வனே ஆற்றிக்கொண்டிருப்பது கண்கூடு. மாநகர சபையின் மக்கள் மட்டுமன்றி யாழ்மாவட்டத்தின் அனைத்து பிரதேசங்களிலுமுள்ள அநேகமான மக்களும் தமது தேவைகளை பூர்த்திசெய்துகொள்ளும் மையமாக யாழ்ப்பாண நகர் விளங்குகின்றது என்பது மிகையாகாது. 1949 ஆம் ஆண்டிலிருந்து யாழ் மாநகர சபையாக ஸ்தாபிக்கப்பட்டு இன்றுவரை இம்மியளவும் குறையாத மக்கள் சேவையை ஆற்றிக்கொண்டிருக்கின்றது. சிறப்பாக, நல்லூர் கோவிலின் உற்சவகாலத்திலும் மற்றும் விசேடமான கந்தனுக்குரிய விரத தினங்களிலும் ஒன்றுகூடும் மக்களின் பெருந்திரளையும் ஒழுங்குபடுத்தி அடியார்களின் நலனுக்கு தீங்குவராது கழிவகற்றல் முகாமைத்துவம் மற்றும் வெளிநிர்வாகப் பொதுப்பணிகளை மிகவும் உன்னதமாக ஆற்றுவது பாராட்டத்தக்கது. தனிமனிதனால் ஆற்றப்படுகின்ற தவறுகள் ஒட்டுமொத்த சமூகத்தையும் பாதிக்கும். ஒவ்வொரு விடயங்களிலும் மாற்றம் தனிமனிதனிலிருந்து உருவாக்கப்படும்போதே நிலையான அபிவிருத்தியை நோக்கி நகரமுடியும். மாநகர சபையும் அதன் நிர்வாகமும் தன்பணியை சிறப்புற ஆற்ற அதன் நிலைபேண் தன்மையை தக்கவைக்க ஒவ்வோர் தனிமனிதனும் உறுதிபூணவேண்டும். எனவே, மக்கள்சேவையே மகேசன் சேவையென மக்கள் பணியாற்றும் மாநகர சபைக்கும், அதன் நிர்வாகம், மற்றும் ஊழியர்களுக்கும் இவ் 75வது அகவைதின நல்வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு.இ.இளங்கோவன்**
ஜனாதிபதியின் மேலதிக செயலாளர்
ஜனாதிபதி செயலகம்.



### பவளவிழா வாழ்த்துச் செய்தி

யாழ் மாநகர சபையின் பவளவிழா 01.01.2024 இன்று ஆகும். இதற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். இலங்கையில் முதன் முதலில் தோற்றுவிக்கப்பட்ட நான்கு மாநகர சபைகளில் ஒன்று என்ற வரலாற்று பெருமையும் வட மாகாணத்தில் உள்ள ஒரேயொரு மாநகர சபை என்ற சிறப்புடனும் எமது யாழ் மாநகர சபை திகழ்கின்றது.

கடந்த எழுபத்தைந்து ஆண்டுகளாக யாழ் மாநகர சபைக்குள் வதியும் மக்களுக்கு மாத்திரமன்றி ஈழத்தமிழ் மக்களுக்கும் எமது யாழ் மாநகரசபை ஆற்றிய பணிகள், சேவைகள் அளப்பரியது. ஈழத்தமிழர்களுடைய வரலாற்றில் கடந்த 75 ஆண்டுகளை ஆய்வு செய்யும் எவரும் அதில் யாழ் மாநகர சபையின் வகிபாகத்தை புறந்தள்ளி ஒதுக்கி அப்பால் சென்றுவிடமுடியாது.

சுமார் ஒருலட்சம் மக்களையும் சுமார் நாற்பதாயிரம் ஆதனங்களையும் கொண்டிருக்கும் யாழ் மாநகர சபை பிரதேசம் 27 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. எமது யாழ் மாநகர சபை 27 கிளைகளையும் சுமார் ஆயிரம் உத்தியோகத்தர்கள் ஊழியர்களையும் கொண்ட மிகப் பெரிய அலுவலகமாக மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதில் பெரும் பங்காற்றிவருகிறது என்பதனை எவரும் மறுக்க முடியாது.

இதுவரை யாழ் மாநகர சபையின் பணிகளுக்கு பெரும்பங்காற்றிய 28 கௌரவ முதல்வர்கள், 17 மாநகர ஆணையாளர்கள், வெவ்வேறு காலத்தில் மாநகர சபையில் மக்கள் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்பட்டு பணியாற்றிய கௌரவ உறுப்பினர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், சித்த வைத்திய அதிகாரிகள், பல்வேறு படிநிலை அரச உத்தியோகத்தர்கள், சபை நியமனத்தின் கீழ் பணிபுரிகின்ற உத்தியோகத்தர்கள், எமக்கு இன்று வரை ஒத்துழைப்பு வழங்கிய கௌரவ ஆளுநர்கள், மத்திய, மாகாண அரச அதிகாரிகள், ஆலோசனைகளை வழங்கி வந்த அன்பர்கள், ஆகியோரை இச்சந்தர்ப்பத்தில் நெஞ்சார்ந்த நன்றியுடன் நினைவுகூருகின்றேன்.

அத்துடன் யாழ் மாநகர சபையானது வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பொதுசன நூலகமும் அதன் ஐந்து கிளை நூலகங்கள், மணிக்கூட்டு கோபுரம், துரையப்பா விளையாட்டு மைதானம், பிரபல்யம் மிக்க மூன்று பூங்காக்கள், ஐந்து பெரிய சந்தைகள், ஆரியகுளம் உட்பட 44 குளங்கள், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, பத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள், ஒன்பது சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகள் ஆகியவற்றைக் கொண்டிருக்கின்றது.

யுத்தத்தின் கோரப்பிடிக்குள் சிக்கி நிரந்தரமான சபையின் கட்டடம் அழிக்கப்பட்ட போதும் இன்றுவரை கடந்த 39 வருடங்களாக நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு சொந்தமான காணியில் தற்காலிகமாக போதிய வசதிகளின்றி சபை இயங்கி வருகின்ற இவ்வேளையில் புதிய மாநகர சபை கட்டிட நிர்மாணப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதும் யாழ் மாநகர சபைக்கு சொந்தமான காணியில் இந்திய அரசால் கட்டப்பட்ட யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையம் நிமிர்ந்து நிற்பதும் மிக முக்கியமான விடயங்களாகும்.

இன்றைய நவீன சூழலில் பல்வேறு சமூக, பொருளாதார, கலை, கலாச்சார தேவைகளைப் பூர்த்தி செய்து யாழ் மாநகரத்தினுடைய வரலாற்றுப் பெருமைகளை மேலும் மெருகேற்றிப் பேணிக் காத்து, மாநகரில் வாழும் மக்களின் தேவைகள், வசதிகளை எமது இயலுமைக்குட்பட்ட அளவில் பூர்த்தி செய்து, எமது பணிகளை மேலும் மேலும் முன் கொண்டு செல்ல அனைவரும் ஒன்றிணைந்து ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டு யாழ் மாநகர சபையின் புகழ் வளர்ந்தோங்கி உயரவும் சபையின் பணிகள் எதிர்காலத்தில் தழைத்துச் செழித்துச் சிறந்தோங்கி ஒளிரவும் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துப் பணிகின்றேன்.

**திரு. இ.த.ஜெயசீலன்**
ஆணையாளர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## நம்பிக்கைக் கீற்றொளியாக மலரட்டும் புத்தாண்டு!

*சரவணபவன் வாழ்த்து*

மலர்ந்திருக்கும் புத்தாண்டு தமிழர்களின் அரசியல் வேணவாக்கும், பொருளாதாரத்துக்கும், இன்னபல விடயங்களுக்கும் நம்பிக்கைக் கீற்றொளியாக அமையட்டும் - இவ்வாறு தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் உதயன் குழுமத் தலைவருமான ஈஸ்வரபாதம் சரவணபவன்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

2023ஆம் ஆண்டு தமிழர்களின் வாழ்வில் நெருக்கடிகளும் ஏமாற்றங்களும் நிறைந்த ஆண்டாகவே அமைந்திருக்கின்றது. அரசியல்கைதிகளின் விடுதலையாகட்டும், காணாமலாக்கப்பட்டோர் விவகாரமாக இருக்கட்டும், காணி விடுவிப்பாக இருக்கட்டும் அல்லது புதிய அரசமைப்பு உருவாக்கமாக இருக்கட்டும் அனைத்திலும் கண்துடைப்பு நாடகம்தான் இன்று தாயகத்திலும் தேசியத்திலும் எஞ்சிநற்கின்றது. பனையால் விழுந்தவன் மீது ஏறிய மாடுபோல், பொருளாதாரப் பேரிடர்களும் தாயகத்தை ஆட்கொண்டு விழுங்கிக் கொண்டிருக்கின்றது. இவ்வாறு பலமுனைப் போராட்டத்துக்குள் சிக்கித்தவிக்கும் தமிழினம் இந்தப் புதிய ஆண்டிலாவது மீட்சி பெறவேண்டும். நம்பிக்கைக் கீற்றொளியாக இந்தப் புத்தாண்டு மலர வேண்டும் என்று எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன் - என்றுள்ளது. (ம)

## பொருளாதார நெருக்கடியிலிருந்து சுபீட்சம் தரட்டும் புத்தாண்டு!

மன்னார், ஜன. 1

மலர்ந்திருக்கும் புத்தாண்டு, எமது மக்கள் பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுபடும் ஆண்டாக அமைய வேண்டும் என்று தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் மன்னார் மாவட்டச் செயலர் கனகேஸ்வரன்.

இதுதொடர்பில் அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் உள்ளதாவது:-

2024ஆம் ஆண்டு அனைவருக்கும் சுபீட்சமான ஆண்டாக அமையவேண்டும் என நான் இறைவனைப் பிரார்த்தனை செய்கிறேன். தற்போது இருக்கும் இயற்கை இடர்பாடுகள் மற்றும் நோய் நிலைகள் என்பன நீங்கி மக்கள் ஆரோக்கியத்துடனும் பொருளாதாரப் பலத்துடன் வாழக்கூடிய சுபீட்சமான ஆண்டாக வரவிருக்கும் புத்தாண்டு அமைய வேண்டும் என்று வாழ்த்துகின்றேன் - என்றுள்ளது. (ம-213)

## புத்தாண்டே வருக புதுவசந்தம் தருக

சென்ற ஆண்டிலிருந்த நெருக்குவாரங்கள், துன்பங்கள் இல்லாமல் மலரும் இந்தப் புத்தாண்டு புதுவசந்தம் தரும் ஆண்டாக அமையட்டும். இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போர், உக்ரைன் - ரஷ்ய மோதல் என்பவற்றாலும், இயற்கை இடர்களாலும், இன்னும் பல வகைகளிலும் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் கடந்த வருடம் மக்கள் பெரும் துன்பப்பட்டுள்ளனர். துயரமான ஆண்டாக அமைந்த அந்த ஆண்டிலிருந்து நாம் விடுபட்டு, மாறுபட்ட எண்ணங்களுடன் புதிய சிந்தனைகளுடன் புத்தாண்டை இன்று வரவேற்கின்றோம்.

இந்தப் புத்தாண்டு அனைத்து மக்களுக்கும் அன்பும், அருளும், செல்வமும் சகல சௌபாக்கியங்களும் தரும் ஆண்டாக அமைவதாக.

**சிவஸ்ரீ தண்ட பாணிக தேசிகர்,**
பிரதம குரு,
வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன்
தேவஸ்தானம்.
பீடாதிபதி
அகில உலக சைவக்குருமார்
பேரவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச அரசியல் அரங்கில் 2023ஆம் ஆண்டு பல்வேறு பதிவுகளைத் தந்துள்ள ஆண்டாகவே பதிவாகி மறைந்திருக்கின்றது. கடந்த வருடத்தில் இடம்பெற்ற முக்கியமான சம்பவங்களின் தொகுப்பே இது.




58 இலங்கையர்களின் புகலிடக் கோரிக்கை ஜனவரி - 6ஆம் திகதி அவுஸ்திரேலியாவால் நிராகரிக்கப்பட்டது.

ராஜபக்சக்களுக்கு நாட்டுக்குள் நுழைவதற்கு ஜனவரி - 10 ஆம் திகதி தடை விதித்தது கனடா.

தமிழகத்தின் பிரபல நகைச்சுவை நடிகர் மயில்சாமி மாரடைப்பு காரணமாக பெப்ரவரி 19 ஆம் திகதி காலமானார்.

பெப்ரவரி - 23 ஆம் திகதி அணு ஆயுத ஒப்பந்தத்திலிருந்து ரஷ்யா விலகிக் கொண்டது.

மே - 7 ஆம் திகதி இங்கிலாந்து மன்னராக முடிசூடினார் 3ஆம் சார்ள்ஸ்.

மே - 9 ஆம் திகதி பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் கைது செய்யப்பட்டார்.

மே - 20 ஆம் திகதி அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஒபாமா உட்பட 500 அமெரிக்கர்களுக்கு ரஷ்யா தடை விதித்தது.

செப்ரெம்பர் முதலாம் திகதி சிங்கப்பூரின் 9ஆவது ஜனாதிபதியாக தமிழரான தர்மன் சண்முகரத்னம் தெரிவு செய்யப்பட்டார்.



## துருக்கி - சிரிய பூகம்பம்

கடந்த பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி துருக்கி மற்றும் சிரியாவில் அடுத்தடுத்து ஏற்பட்ட நிலநடுக்கம் அந்த நாடுகளை உலுக்கிப் போட்டன. இது ரிக்டர் அளவில் 7.8 மற்றும் 7.5 எனப் பதிவானது. துருக்கியில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரும் சிரியாவில் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரும் நிலநடுக்கத்தால் உயிரிழந்தனர்.

## காலநிலை உச்சி மாநாடு

காலநிலை மாற்றம் உலகத்துக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக மாறி வருகிறது. பருவநிலை மாற்றம் குறித்த 28ஆவது உச்சி மாநாடு ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தின் டுபாயில் கடந்த நவம்பர் மாதம் 30ஆம் திகதிமுதல் டிசெம்பர் மாம் 12ஆம் திகதிவரை நடைபெற்றது. காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வது தொடர்பான பல முக்கியமான முடிவுகள் இந்த மாநாட்டில் எடுக்கப்பட்டன.

## சீனாவை பின்தள்ளிய இந்தியா

மக்கள் தொகை எண்ணிக்கையில் இதுவரை சீனா முதலிடம் வகித்து வந்தது. தற்போது, இந்தியா முதலிடத்துக்கு நகர்ந்துள்ளது. உலக சனத் தொகை கணக்கீட்டு அமைப்பின் தகவல்களின் அடிப்படையில், இந்தியாவின் மக்கள் தொகை தற்போது 142.78 கோடியாகவும். சீனாவின் மக்கள் தொகை 142.56 கோடியாகவும் உள்ளது.

## பெயர் மாறிய ருவிற்றர்

உலக கோடீஸ்வரரான எலான் மஸ்க் 2022ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 27ஆம் திகதியன்று ருவிற்றர் நிறுவனத்தை விலைக்கு வாங்கினார். அதன்பின்னர் அந்த நிறுவனத்தின் வருமானத்தை அதிகரிக்கவும் கருத்துச் சுதந்திரத்தை மேம்படுத்தலும் என பல அதிரடி நடவடிக்கைகளை எடுத்தார். இதன் தொடர்ச்சியாக கடந்த ஜூலை மாதம் ருவிற்றரின் பெயரை 'எக்ஸ் தளம்' என்று மாற்றம் செய்தார். பல உயர்மட்ட அதிகாரிகளை பணிநீக்கம் செய்தார்.



## இஸ்ரேல் - ஹமாஸ் போர்

ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி இஸ்ரேல் மீது எதிர்பாராத தாக்குதலை மேற்கொண்டது ஹமாஸ். இந்தத் தாக்குதலில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். இதையடுத்து ஹமாஸுக்கு எதிராகப் போர் தொடுத்துள்ள இஸ்ரேல் காஸாவில் தொடர் தாக்குதல்களை நடத்தி வருகின்றது. இந்தப் போரில் சுமார் 20 ஆயிரம் பேர் கொல்லப்பட்ட நிலையில், போருக்கு ஒரு முடிவுகட்ட வேண்டும் என உலக நாடுகள் எவ்வளவோ முயன்றும், தற்போது வரை இங்கு நிரந்தர அமைதி சாத்தியமாகவில்லை.




## கப்பல் விபத்து

டைட்டானிக் கப்பல் உலக அளவில் இன்றுவரை மிகப் பிரபலமானதாகக் கருதப்படுகிறது. டைட்டானிக் கப்பல் குறித்த ஆராய்ச்சிகளும், ஆவலும் இன்றுவரை நீடிக்கிறது. நீர்மூழ்கிக் கப்பல் மூலம் அதைக் காண சுற்றுலாப் பயணிகள் செல்வதும் இன்றளவும் தொடர்ந்து நடந்துவருகின்றன. இவ்வாறிருக்கையில், ஜூன் 18ஆம் திகதியன்று டைட்டானிக் கப்பலின் சிதைந்த பாகங்களைக் காண கனடாவில் இருந்து கடலுக்குள் சென்ற நீர்மூழ்கிக் கப்பல் மாயமானது. கனடா, அமெரிக்க கடலோர காவல்படையினர் மாயமான நீர்மூழ்கிக் கப்பலைத் தேடும் பணியில் இரவு பகலாக ஈடுபட்டனர். ஆனால் நீர்மூழ்கிக் கப்பல் வெடித்துச் சிதறியதில் அதில் பயணித்த 5 கோடீஸ்வரர்களும் உயிரிழந்து விட்டனர் என்று அமெரிக்கக் கடலோர காவல்படை அறிவித்தது.

## ஜி-20 மாநாடு

ஜி -20 கூட்டமைப்பின் 18ஆவது உச்சி மாநாடு புதுடில்லியில் செப்ரெம்பர் 9, 10 ஆகிய திகதிகளில் நடைபெற்றது. மாநாட்டில், பிரதமர் மோடி, அமெரிக்க அதிபர் ஜோ பைடன், பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக், கனடா பிரதமர் உட்பட ஜி- 20 கூட்டமைப்பின் தலைவர்கள் பங்கேற்றனர். இந்தியாவின் ஜி-20 ஆலோசனைக் கூட்டங்களில் முதன் முறையாக பல முக்கியமான தலைப்புகள் முன்னிறுத்தப்பட்டன.



## கனடா - இந்தியா மோதல்

கனடாவைச் சேர்ந்த சீக்கிய பிரிவினைவாதத் தலைவரான (காலிஸ்தான்) ஹர்தீப் சிங் நிஜார் கடந்த ஜூன் 18ஆம் திகதி கனடாவில் உள்ள சீக்கிய குருத்வாராவுக்கு அருகே சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது கொலையில் இந்திய அரசுக்கு தொடர்பு இருப்பதாக அந்த நாட்டு நாடாளுமன்றத்தில் ஜஸ்டின் ட்ரூடோ குற்றச்சாட்டை முன்வைத்தார். கனடாவின் குற்றச்சாட்டை இந்தியா மறுத்துள்ளது. கனடாவில் உள்ள இந்தியத் தூதரை வெளியேற ஜஸ்டின் ட்ரூடோ உத்தரவிட்டார். இதற்கு எதிர்வினையாக இந்திய அரசு, இந்தியாவில் உள்ள கனடா நாட்டுத் தூதரக அதிகாரியை வெளியேற உத்தரவிட்டது. அதையடுத்து இரு நாடுகளினதும் உறவில் விரிசல் ஏற்பட்டது.


## ப்ரெடி சூறாவளி

கிழக்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள நாடு மலாவி. அந்தநாட்டில் பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி ப்ரெடி என்ற சூறாவளி புயலால் பாதிப்பு ஏற்பட்டது. இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்தனர். ஆயிரத்து 400க்கும் மேற்பட்ட இறப்புகளை ஏற்படுத்திய இந்தச் சூறாவளி, தீவிர வெப்பமண்டல சூறாவளி என்று கூறப்படுகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நெருக்கடி + வரிவதைப்பு = பணவீக்கம்





## ஜனவரி

01.01.2023 பிரிட்டனின் முன்னாள் பிரதமர் டேவிட் கமரூன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்தார்.

03.01.2023 உத்தேச உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்தது.

06.01.2023 மக்கள் போராட்டத்தை அடுத்து நாட்டை விட்டுத் தப்பிச் சென்ற முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தனது மனைவியுடன் டுபாயிலிருந்து இலங்கையை மீண்டும் வந்தடைந்தார்.

10.01.2023 மனித உரிமை மீறல்களுக்காக இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகளான கோத்தாபய, மஹிந்த உள்ளிட்ட நால்வர் மீது பொருளாதாரத்தடைகளை கனடா அரசாங்கம் அறிவித்தது.

12.01.2023 2009 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட அரசியல் கைதியான கனகரத்தினம் ஆதித்யன் 14 வருடங்களின் பின்னர் விடுதலை.

12.01.2023 வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைந்திருந்த காலப்பகுதியில் கல்வி அமைச்சின் செயலாளராக இருந்தவரும் மிகச்சிறந்த ஆளுமையாளருமான சுந்தரம் டிவகலாலா மறைவு.

12.01.2023 ஈஸ்டர் தாக்குதல்களைத் தடுக்கத் தவறினார் என்ற வகையில், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 10 கோடி ரூபா இழப்பீடு செலுத்த வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது.

12.01.2023 வடக்கு முன்னாள் ஆளுநர் ரெஜினோல்ட்குரே தனது 74 ஆவது வயதில் உயிரிழந்தார்.

14.01.2023 தமிழ்க்கட்சிகள் இணைந்து புதிய கூட்டணிக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் (ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி எனும் பெயரில் ) கைச்சாத்திட்டன.

## பெப்ரவரி

11.02.2023 – இந்திய அரசின் நிதியுதவியுடன் யாழ்ப்பாண மக்களுக்காக அமைக்கப்பட்ட யாழ்ப்பாண கலாசார நிலையம் உத்தியோகபூர்வமாக யாழ். மக்களுக்கு வழங்கப்பட்டது.

13.02.2023 – உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தபால் மூல வாக்களிப்புக்கான வாக்குச்சீட்டு விநியோகம் திடீரென நிறுத்தப்பட்டது.

14.02.2023 – உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது என தேசிய தேர்தல்கள் ஆனைக்குழு அறிவித்தது.

14.02.2023 – யாழ். மாநகரசபையில் ஆர்னோல்டின் பட்ஜெட் தோற்கடிக்கப்பட்டது.

15.02.2023 – மின்கட்டணத்தை 65 வீதமாக உயர்த்துவதற்குப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியது.

17.02.2023 – யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் கணிதத்துறைப் பேராசிரியருமான இ.விக்னேஸ்வரன் காலமானார்.

28.02.2023 – பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவை நாடாளுமன்றில் முன்வைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது.

## மார்ச்

01.03.2023 – உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் வழக்கில் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டிருந்த ரணில் விக்கிரமசிங்க அந்த வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

07.03.2023 – பொறுப்புக்கூறலை வலியுறுத்தும் ஐ.நா.வின் தீர்மானத்தை நிராகரித்தது இலங்கை

07.03.2023 – வவுனியா குட்செட் வீதியில் உள்ள வீடொன்றிலிருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் சடலங்களாக மீட்கப்பட்டனர்.

07.03.2023 – ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல் என தேர்தல்கள் ஆணைக்குழு மீண்டும் அறிவிப்பு

09.03.2023 – உள்ளூராட்சித் தேர்தல் திகதி தொடர்பான வர்த்தமானி வெளியிடப்பட்டது.

12.03.2023 – ஆனையிறவுப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட 27 அடி உயரமான நடராஜர் சிலை திறக்கப்பட்டது.

18.03.2023 – தமிழ் மக்களின் பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் நாவற்குழி விகாரை கலச திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

27.03.2023 – நெடுங்கேணி – வெடுக்குநாறி மலையிலிருந்த ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் அடித்து உடைத்து சிதைக்கப்பட்டது.

28.03.2023 – நாவலர் கலாசார மண்டபத்தின் பொறுப்புகள் கொழும்பு அரசின் கீழுள்ள இந்து கலாசாரத் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டது.

## ஏப்ரல்

03.04.2023 யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டப விவகாரம் தொடர்பில் ஆளுநருக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

05.04.2023 நல்லிணக்க ஆணைக்குழுச்சட்டம் உருவாக்க அமைச்சரவை அனுமதி வழங்கியது.

08.04.2023 திருகோணமலை – மட்டக்களப்பு பிரதான வீதியில் தமிழ்மக்கள் பூர்வீகமாக வழிபட்டு வந்த பிள்ளையார் சிலை அகற்றப்பட்டு, அங்கு புத்த விகாரை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

12.04.2023 ஈழத்தின் மூத்த ஊடகவியலாளர் பொன்னையா மாணிக்கவாசகம் தனது 76 ஆவது வயதில் காலமானார்.

19.04.2023 உதயன் பத்திரிகையின் முன்னாள் சிரேஷ்ட உதவி ஆசிரியர் சரவணமுத்து தங்கராஜா தனது 79 ஆவது வயதில் காலமானார்.

22.04.2023 யாழ்ப்பாணம் – நெடுந்தீவில் 5 வயோதிபர்கள் வெட்டுக்காயங்களுடன் சடலங்களாக மீட்கப்பட்டனர்.

25.04.2023 இலங்கை அரசின் அடக்குமுறைகளைக் கண்டித்து வடக்கு– கிழக்கில் கடையடைப்பு இடம்பெற்றது.

28.04.2023 மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்ன கொடவுக்கு அமெரிக்கா பயணத் தடைவிதித்தது.

28.04.2023 நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் வவுனியா, நெடுங்கேணி வெடுக்குநாறிமலையில் விக்கிரகங்கள் மீள் பிரதிஷ்டை செய்யப்பட்டன.

## மே


03.05.2023 வலி. வடக்கு தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்படும் விகாரையை அகற்றக் கோரி இடம்பெற்ற போராட்டத்தில் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

04.05.2023 யாழ்.தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு அண்மையில் உள்ள காணியில் இருந்து அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட எந்தத் தடையுமில்லை என்று மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டது.

11.05.2023 மாகாணசபைத் தேர்தல் திருத்தச் சட்டவரைவு வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

16.05.2023 யாழ். பண்ணை சுற்றுவட்டப்பகுதியில் அமைக்கப்பட்ட அம்மன் சிலை தொடர்பான வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது.

17.05.2023 வடக்கு – கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்களுக்கான புதிய ஆளுநர்கள், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## ஜூன்

05.06.2023 பூநகரி பிரதேசசபையால் பல்லவராயன்கட்டுச் சந்தியில் பல்லவராய மன்னன் சிலை திறக்கப்பட்டது.

07.06.2023 நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் கொழும்பில் கைது. பின்னர் பிணையில் விடுவிப்பு.

10.06.2023 யாழ். காங்கேசன்துறையில் 33 ஆண்டுகளின் பின்னர் சுமார் 30 ஏக்கர் காணி இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்கப்பட்டது.

12.06.2023 தமிழ்ப் பிரதேசங்களில் திட்டமிட்ட பௌத்தமயமாக்கல் நடைபெறுகின்றது என்ற சர்ச்சையை அடுத்து தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அநுரமனதுங்க பதவி விலகினார்.

16.06.2023 சென்னையிலிருந்து 519 சுற்றுலாவிகளுடன் காங்கேசன்துறையை வந்தடைந்தது சொகுசுக் கப்பல்.

20.06.2023 யாழ். அல்லைப்பிட்டியில் மனித எச்சங்கள் மீட்பு

29.06.2023 முல்லைத்தீவு – கொக்குத்தொடுவாய் பகுதியில் மனிதப் புதைகுழியிலிருந்து மனித எச்சங்கள் மீட்பு.



## ஜூலை

04.07.2023 முல்லைத்தீவு நீதிவான் மற்றும் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் குருந்தூர்மலைக்குச் சென்று நீதிமன்றக் கட்டளையை மீறி அமைக்கப்படும் விகாரைக் கட்டமைப்புகளை பார்வையிட்டனர்.

11.07.2023 நீதிபதியையும், நீதிமன்றத்தையும் அவமதிக்கும் கருத்துகளை வெளியிட்டார் என நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவுக்கு எதிராக வடக்கில் சட்டத்தரணிகள் பணிப்புறக்கணிப்புச் செய்தனர்.

14.07.2023 குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தில் பொங்கல் வழிபாட்டுக்குச் சென்ற தமிழ்மக்கள், பிக்குகள் தலைமையிலான சிங்களக் காடையர்களால் மிரட்டப்பட்டனர்.

28.07.2023 கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரத்தில் சர்வதேசத் தலையீடு கோரி தமிழர் தாயகப் பகுதிகளில் ஹர்த்தால் இடம்பெற்றது.

## ஓகஸ்ட்

06.08.2023 கி.பி.1ஆம் – 3ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட லக்சுமி நாணயங்கள் கந்தரோடையில் மீட்கப்பட்டன.

07.08.2023 சுழிபுரம் – பறாளாய் முருகன் ஆலய அரச மரத்தை தொல்பொருள் சின்னமாக அறிவித்து வெளியிடப்பட்ட வர்த்தமானி தொடர்பில் அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

08.08.2023 திருகோணமலை, இலுப்பைக்குளம் பொரலகந்த ராஜமகாவிகாரையின் கட்டுமானப்பணிகளை உடனடியாக நிறுத்துமாறு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் உத்தரவிட்டார்.

17.08.2023 குருந்தூர்மலையில் தமிழர் வழிபாட்டுரிமைக்கு தடைவிதிக்க முடியாது என முல்லைத்தீவு நீதிமன்றம் கட்டளை பிறப்பித்தது.

19.08.2023 யாழ்ப்பபாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக கணிதப் புள்ளி விவரத் துறையின் மூத்த பேராசிரியர் சிறிசற்குணராஜா இரண்டாவது முறையாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

28.08.2023 ஒல்லாந்தர் இலங்கையைக் கைப்பற்றி ஆட்சிசெய்த காலத்தில் எடுத்துச் செல்லப்பட்ட இலங்கையின் மரபுரிமைச் சின்னங்களை இலங்கையிடம் ஒப்படைத்தது நெதர்லாந்து.

## செப்ரெம்பர்

02.09.2023 இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து யாழில் கவனவீர்ப்புப் போராட்டம்

04.09.2023 யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட 8வயதுச் சிறுமியின் கை மணிக்கட்டின் கீழ் அகற்றப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

06.09.2023 உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் சூத்திரதாரிகள் ராஜபக்சக்களே என சனல் – 4 ஊடகம் தகவல் வெளியிட்டது.

06.09.2023 மனிதப் புதைகுழி தென்பட்ட கொக்குத்தொடுவாயில் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

17.09.2023 திருகோணமலையில் தியாக தீபம் திலீபனின் ஊர்தி மீது சிங்களக் காடையர்களால் தாக்குதல் நடத்தப்பட்டது.

22.09.2023 தியாக தீபம் திலீபனின் (திலீபன் தியாக தீபமாக) ஆவணக்காட்சியகம் யாழ்.நல்லூரில் திறந்து வைக்கப்பட்டது.

29.09.2023 உயிர் அச்சுறுத்தல், அழுத்தங்கள் காரணமாக முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி. சரவணராஜா பதவியைத் துறந்து நாட்டைவிட்டு வெளியேறிச் சென்றார்.








## ஒக்ரோபர்

06.10.2023 கொழும்பு – கொள்ளுப்பிட்டியில் வீதியில்நின்றிருந்த மரம் வீழ்ந்து பேருந்து நசுங்கியதில் 5 பேர் சாவடைந்தனர்.

08.10.2023 மயிலத்தமடு மேய்ச்சல் தரையைக் கோரிய தமிழ்ப் பண்ணையாளர்களின் தொடர் போராட்டம் மற்றும் கவனவீர்ப்புப் போராட்டங்களுக்கு ஏறாவூர் நீதிமன்றத்தால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

08.10.2023 தமிழகத்துக்கான கப்பல் சேவையான செரியா பயணிகள் கப்பல் சேவையின்பரீட்சார்த்தப் பயணம் வெற்றிகரமாக இடம்பெற்றது.

11.10.2023 இலங்கை – இந்தியா இடையே 3 ஒப்பந்தங்கள் கைச்சாத்து

19.10.2023 பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாமல் முடித்துக்கொள்ளுமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

20.10.2023 நீதித்துறைக்கு பிரயோகிக்கப்பட்ட அழுத்தம் மற்றும் தமிழர்களின் நில ஆக்கிரமிப்புக்கு எதிரப்புத் தெரிவித்து வடக்கு – கிழக்கில் ஹர்த்தால் நடைபெற்றது.

## நவம்பர்

02.11.2023 2020 ஆம் ஆண்டு உதயன் பத்திரிகையில் வெளியான செய்திகள்.ஒளிப்படம் தொடர்பில் பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினரால் கொழும்பில் வைத்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

03.11.2023 இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் யாழ்ப்பாணத்துக்கு வருகை

04.11.2023 மட்டக்களப்பு –மயிலத்தமடுவுக்குப் போராடச் சென்ற பல்கலைக்கழக மாணவர்கள் 6 பேர் கைது

13.11.2023 ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் 2024ஆம் நிதி ஆண்டுக்கான பாதீடு முன்வைக்கப்பட்டது.

நவம்பர் 19 யாழ் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இளைஞர் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்ததால் பதற்றம்

நவம்பர் 27 தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரன் தொடர்பான செய்தியை வெளியிட்டமைக்காக உதயன் பத்திரிகை ஆசிரியரிடம் ரி.ஐ.டி.யினர் கொழும்பில் வைத்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.



## டிசெம்பர்

01.12.2023 தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் இந்தியத் தலைநகர் புதுடில்லியில் பல்வேறு தரப்பினருடன் சந்திப்பில் ஈடுபட்டனர்.

09.12.2023 நாடு முழுவதும் திடீர் மின்தடை ஏற்பட்டது.

10.12.2023 நாட்டைக் கட்டியெழுப்ப இமயமலைப் பிரகடனம் உலகத்தமிழர் பேரவையால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

11.12.2023 வற்வரியை அதிகரிப்பது தொடர்பான திருத்தச்சட்டவரைவு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

13.12.2023 2024 ஆம் நிதியாண்டுக்கான வரவு– செலவுத்திட்டம் மேலதிக 41 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

14.12.2023 இலங்கைக்கு இரண்டாம் கட்டமாக 337 மில்லியன் டொலர் கடன் நிதியை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபை அனுமதியளித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2023

## இந்தியா



### ஜனவரி

இந்திய மல்யுத்த சம்மேளன தலைவரும், பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினருமான பிரிஜ் பூஷண் சரண் சிங் மீது பாலியல் அத்துமீறல் குற்றச்சாட்டு முன்வைக்கப் பட்டது. அவரைக் கைதுசெய்ய வலியுறுத்தி ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற மல்யுத்த வீராங்கனைகளான சாக்சி மாலிக், வினேஷ்போகத், மல்யுத்த வீரர் பஜ்ரங் புனியா ஆகியோர் தொடர் போராட்டம் முன்னெடுத்தனர்.

நிர்வாக நடைமுறையிலும், பங்குகளின் மதிப்பை செயற்கையாக உயர்த்தியும் மோசடியில் அதானி குழுமம் ஈடுபட்டதாக ஹிண்டன்பர்க் அறிக்கையிட்டது. அதனால் உலக பணக்காரர்களில் மூன்றாவது இடத்திலிருந்த அதானி 25 ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டார்.



### மே

மே மாதம் தொடக்கத்தில் ஆரம்பமான மணிப்பூர் கலவரம் ஜூலையில் உச்சம் பெற்றது. மெய்தேய் சமூகத்தினருக்கு அதிகாரபூர்வ பழங்குடி அந்தஸ்து வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கைக்கு குக்கி இன மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததையடுத்து மணிப்பூரில் இந்த வன்முறை வெடித்தது. இது இந்தியாவின் வரலாற்றில் கரும்புள்ளியாகப் பதிவாகியது.

புதிய நாடாளுமன்றக் கட்டடத்தை பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார்.

### ஜூன்

ஒடிஸாவில் மூன்று ரயில்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டதில் சுமார் 300 பேர் பலியாகினர். 850க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

### ஜூலை

2019 ஆம் ஆண்டு நடந்த தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் மோடி பெயர் குறித்து சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்டார் எனத் தெரிவித்து தொடரப்பட்ட அவதூறு வழக்கில் ராகுல் காந்திக்கு சூரத் நீதிமன்றம் 2 ஆண்டு சிறைத்தண்டனை விதித்தது. இதனால் அவர் மக்களவை உறுப்பினர் பதவியை இழந்தார்.



### ஓகஸ்ட்

நிலவை ஆய்வு செய்வதற்காக இஸ்ரோ அனுப்பிவைத்த சந்திரயான் - 3 செயற்கைக்கோளின் விக்ரம் லேண்டர், ஓகஸ்ட் 23 ஆம் திகதி வெற்றிகரமாக நிலவின் தென்துருவத்தின் தரையிறங்கியது.

### டிசெம்பர்

தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் தலைவரும் தென்னிந்தியத் திரையுலகின் முன்னணி நட்சத்திரமுமான 'புரட்சிக் கலைஞர்' விஜயகாந்த் நுரையீரல் அழற்சி காரணமாக உயிரிழந்தார். அவருக்குக் கொரோனாத் தொற்று இருந்ததும் உறுதி செய்யப்பட்டது.

## உலகச்சம்பியனான ஆஸி.

சர்வதேச கிரிக்கெட் சபையின் 50 ஓவர் உலகக்கிண்ணத் தொடர் இந்தியாவில் இம்முறை நடைபெற்றது. நவம்பர் மாதம் 19ஆம் திகதி இடம்பெற்ற இறுதியாட்டத்தில் அவுஸ்திரேலியா மற்றும் இந்தியா அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணி வெற்றிபெற்று சம்பியனானது. இது அந்த அணியின் ஆறாவது உலகக் கிண்ணமாகும்.



## கோலியின் 50ஆவது சதம்

உலகக்கிண்ணத் தொடரில் நவம்பர் மாதம் 16ஆம் திகதி இடம்பெற்ற நியூஸிலாந்து மற்றும் இந்திய அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் தனது 50 ஆவது சதத்தை எட்டிப்பிடித்தார் கோலி. இதற்கு முன்னர் சச்சின் பதிவுசெய்த 49 சதங்களே உலகசாதனையாக இருந்த நிலையில், கோலி – சச்சினின் சாதனையைத் தகர்த்தெறிந்தார்.





## டெஸ்ட் மகுடமும் ஆஸிக்கே

சர்வதேச கிரிக்கெட் சபையின் 'உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்' இறுதியாட்டம் ஓவல் மைதானத் தில் ஜூன் மாதம் 7ஆம் திகதிமுதல் 11ஆம் திகதிவரை இடம்பெற்றது. இறுதியாட்டத்தில் இந்தியாவைத் தோற்கடித்து கிண்ணம் வென்றது ஆஸி. இந்த அவுஸ்திரேலிய அணியின் முதலாவது டெஸ்ட் சம்பியன்ஷிப் கிண்ணமாகும்.

## சம்பியனான சென்னை

புகழ்பெற்ற ஐ.பி.எல். தொடரின் இறுதியாட்டம் குஜராத்தின் நரேந்திர மோடி மைதானத்தில் மே மாதம் 28ஆம் திகதி இடம்பெற்றது. இந்த ஆட்டத் தில் குஜராத் மற்றும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி கள் மோதின. சென்னை அணி த்ரில் வெற்றியைப் பெற்று சம்பியனாக மகுடம் சூடியது.





## ஆசியச் சம்பியனான இந்தியா

இலங்கையில் இடம்பெற்ற ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இந்திய அணி சம்பிய னானது. பிரேமதாஸ மைதானத் தில் செப்ரெம்பர் மாதம் 17ஆம் திகதி இடம்பெற்ற இந்த இறுதி யாட்டத்தில் இலங்கை அணியை எதிர்த்து இந்திய அணி மோதியது. 50 ஓட்டங்களுக்கு இலங்கை அணியை வீழ்த்தி சம்பியனானது இந்தியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

மலர்வு 19 . 03 . 1961



உதிர்வு 31 . 12 . 2023

### சரவணமுத்து வரதராசா

சாவகச்சேரி, பெரிய மாவடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து வரதராசா அவர்கள் நேற்று (31.12.2023) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து இராசம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், சந்திரராசா (ஓய்வு நிலை முகாமைத்துவ உதவியாளர் - தென்மராட்சி கல்வி நிலையம்), சிவராசா, அற்புதராணி, கௌரீசன் (ஆசிரியர், கிளி/பளை மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், செல்வராணி, சகுந்தலாதேவி, அமரர் நாகேஸ்வரன், சிவலதா (ஆசிரியர், கிளி/பளை RCTMS ) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், யதீசன், யபோசன், சுஹேசினி, காருசன், கஜானன், சாம்பவி ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும், தர்மிகா, பிறைஜினி ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும், சாளினி, நாகபூசணி, செவ்வேள், மயூரன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.01.2024) திங்கட்கிழமை அவரது அண்ணன் சந்திரராசா (அல்லாரை) அவர்களின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 01.00 மணியளவில் எறியாள்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:
**சகோதரர்கள்.**
சந்திரராசா - 077 365 6907
சிவராசா - 076 850 4354
கௌரீசன் - 077 329 1685

அல்லாரை தெற்கு,
மீசாலை.

(CR 41430) S-1

## மரண அறிவித்தல்

மலர்வு 21 . 10 . 1928



உதிர்வு 29 . 12 . 2023

### நல்லதம்பி தாமோதரம்பிள்ளை

(அரசடி டச்சு றோட், அளவெட்டி மேற்கு, அளவெட்டி)

அளவெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி தாமோதரம் பிள்ளை கடந்த (29.12.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற சின்னத்தம்பி, தெய்வானைப்பிள்ளை, சின்னம்மா ஆகியோரின் சகோதரனும், நாகரத்தினம், நாகபூசணி, நாகலோசனி, புஷ்பலோசினி (கனடா), முருகதாஸ், சிவதாசன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சாந்தி, Dr.ஈஸ்வரன் (ஆயுள்வேத வைத்தியர்), தவச்செல்வம் (ஓய்வுநிலை தாதிய உத்தியோகத்தர்), மன்மதராஜன் (கனடா), ரதி, சுஜீவா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், திவாகரன் (தொழிலதிபர்) - சமிகா, கயானா - இரதீஸ்காந் (லண்டன்), நீலாகரன்- இருசா (லண்டன்), துஷ்யந்தி - சத்தியதீபன் (கனடா), தர்சிகா - ரமேஷ் (கனடா), ததுர்சனி - பவனீதரன், அயந்தன்- சுகந்தினி, தேனுகா - அருணன், கௌரிசங்கர் (லண்டன்), ஜஸ்மினி, விசாலினி, பிரவின், அஜய் (கனடா), நிதுஜா, கிதுஜா, ஸ்ரீராம், வினேஷ் (லண்டன்) ஆகியோரின் அன்பு பேரனும், கனியா, லிசாந், திரேஷ், ஷக்சனா, பிரித்திகன், ஹர்சனா, திஸ்வின், காவ்யா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.01.2024) திங்கட்கிழமை முற்பகல் 09.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தம்மளை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
**077 604 7567**

(CS 27528) S-1

தகவல்:
**குடும்பத்தினர்**

# மஹிந்த ஓய்வுக்குச் செல்வது நல்லது

கொழும்பு, ஜன. 1

மஹிந்த ராஜபக்ச அரசியலில் இருந்து ஓய்வு பெறவேண்டும். ராஜபக்ச அல்லாத ஒருவர் பொதுஜன பெரமுனக் கட்சியின் தலைமைப்பதவிக்கு வரவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுஜன பெரமுன மற்றும் ரணில் விக்கிரமசிங்கவின் அனுசரணையுடன் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நான் பொதுவேட்பாளராகக் களமிறங்கவுள்ளதாக சுதந்திர மக்கள் சபை உறுப்பினர்களிடம் கூறியதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இந்தத் தகவலில் எவ்வித உண்மையும் இல்லை. மஹிந்த ராஜபக்சவின் பொருளாதாரக் கொள்கைகளைக் கடுமையாக 2014 இலேயே விமர்சித்தவன் நான். நாடு வங்குரோத்து அடையும் என அன்றே கூறியிருந்தேன். நாட்டை வங்குரோத்து அடைய வைத்த தரப்புடன் நாம் இணைய மாட்டோம். அதேவேளை, ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எமக்கும் இடையில் அரசியல் உறவு கிடையாது. அவருடனும் அரசியல் கூட்டணி அமைக்க மாட்டோம் - என்றார். (அ-ஒ-44)


## வீடு வாடகைக்கு

ஸ்ரான்லி றோட் சிற்றி ஹாட்வெயாருக்கு அருகாமையில் மூன்று அறைகள், கிச்சின் மற்றும் வீட்டுடன் இணைந்த மலசல கூடம் மற்றும் குளியலறைகளுடன் புத்தம் புதிய மாடி வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்கள், குடும்பங்கள் வைத்தியசாலைகளில் வேலைசெய்யும் உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது

(cs 52205) (N-1)

**077 707 0081,077 247 8017**

## நல்லூர்க் கந்தன் திருமண சேவை

**எம் இனிய உறவுகள் அனைவருக்கும் எம் இனிய புது வருட வாழ்த்துக்களை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்**

எமது திருமண சேவையில் எல்லாவித மணமகன்களுக்கும் மணமகள்களுக்கும் ஏற்ற வரன்களை விரைவாகத் தெரிவு செய்து தரப்படும்.

**தொடர்பு: வி. ஜெயந்தி**
**077 973 3183**

(CS 27529) S-1


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் சங்கீத ஆசிரியை
**திருமதி சியாமளா பாலகிருஸ்ணன்**
அவர்களின் அன்புத் தாயார்

### கணேசபிள்ளை பொன்னம்மா

அவர்கள் நேற்று (31.12.2023) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தமையை இட்டு பிரிவால்துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் : 25.07.1941
மறைவு : 31.12.2023

**அதிபர், ஆசிரியர்கள்**
**யா/ மண்டைதீவு றோ.க.வித்தியாலயம்**


## உரிமையாளர் மாற்றம்

**கோண்டாவில் ஸ்ரேசனடி இரண்டாம் (2) இலக்க கடையில் இயங்கிய உரிமையாளர்**

### நல்லையா உதயகுமார்

**[பெரியதம்பி]**



**ஆட்டிறைச்சி கடை கொக்குவில் குளப்பிட்டிச் சந்தை ஆட்டிறைச்சி கடைக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்**

**ஆரம்பம்: 01.01.2024**

தொ.பே.: **077 085 6479**


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றிநவிலலும்

கடந்த 04.12.2023 திங்கட்கிழமை
அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

### அமரர் கணபதிப்பிள்ளை கிருஷ்ணமூர்த்தி



தோற்றம் 29.03.1968 — மறைவு 04.12.2023

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (01.01.2024) திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளைமறுதினம் (03.01.2024) புதன் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னார் யாழ். போதனா வைத்தியசாலை விடுதி இல.9 இல் இருந்தபோது அவருக்கு சிகிச்சையளித்த வைத்தியர்கள், தாதியர்கள், உதவியாளர்கள், மரண கிரியைகளின்போது நேரில் வருகை தந்தோருக்கும் தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட உள்நாட்டு, வெளிநாட்டு உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், மலர்வளையம், கண்ணீர் அஞ்சலி சுவரொட்டியை வெளியிட்டோர் களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**கோப்பாய் வடக்கு,**
**கோப்பாய்.**

(cs.53295) (N.1)

பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்**
**074 087 9734**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல்கள்...

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

முறையாக மக்கள் ஆணையைப் பெற்ற அரசாங்கத்தை உருவாக்கினால் அன்றி தற்போதைய குழப்பமான மற்றும் நம்பிக்கையற்ற இருள் சூழ்ந்த காலத்தை முடிவுக்குக்கொண்டுவரமுடியாது. அடுத்த ஆண்டு புதிய தேர்தலுக்கு வழி வகுப்பதே முதன்மையான போராட்டமாக இருக்கவேண்டும். அப்படி இல்லை என்றால், 2024 ஆம் ஆண்டும் ராஜபக்சக்களை முன்னரையும் விட பாதுகாப்பாக ஆட்சியாளர் தொங்கு பாலத்தின் ஊடாக கரை சேர்த்த ஆண்டாக அமையலாம்.

விவசாயம் மற்றும் தொழில்முயற்சியாளர் சார்ந்த தன்னிறைவு பொருளாதார முறை தற்போதைய அரசாங்கத்தின் தொலைநோக்கு அற்ற நடவடிக்கைகளால் முற்றிலும் தலைகீழாக மாறியுள்ளது. இந்நிலை மாற வேண்டுமானால் ஆட்சியாளர்களின் நன்மைகளைப் பற்றி சிந்திக்காமல் மக்களைப் பற்றிச் சிந்திக்கும் ஆட்சி முறையே நாட்டுக்குத் தேவை. மக்களை ஒடுக்கி, வரிக்கு வரி விதித்து, மக்களின் வாழ்வை அழிக்கும் வகையில் அரசு செயற்பட்டுள்ள இந்தத் தருணத்தில், நாம் மீண்டும் ஒரு நாடாக ஒன்றிணையவேண்டும். எதிர்வரும் புத்தாண்டு இலங்கையர்களான எமக்கு முக்கியமான ஆண்டாகும். நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் பல தேர்தல்கள் நடைபெறவுள்ள ஆண்டாகும்.

இதுவரையில் நாம் பெற்ற வெற்றிகளின் பலனை அமைதியான முறையில் அனுபவித்து ஜனநாயகத்தைப் பாதுகாத்துக்கொண்டு எமது தேசிய அபிலாஷைகளை நிறைவேற்ற அனைவரும் ஒன்றிணைய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்தப் புத்தாண்டிலாவது மக்கள் தங்கள் அபிலாஷைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதே எனது பிரார்த்தனையாகும் - என்றார். (அ-ஒ-இ)

## எலிக்காய்ச்சலால்...

நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளான். சில தினங்களாக இந்த இளைஞருக்கு காய்ச்சல் இருந்துள்ளது. இதனையடுத்து பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக அங்கிருந்து வவுனியா பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார். இந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார். (அ-ஒ-110)

## ஏக்கங்கள்...

தாக யாழ். ஆயர் கலாநிதி யஸ்ரின் பேர்னாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

அவரது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த ஆண்டு, பல இன்பமான அனுபவங்களையும் பல துன்பமான அனுபவங்களையும் தந்து, எம்மை விட்டுக் கடந்து சென்றுவிட்டது. கடந்த ஆண்டின் அந்த இன்ப அனுபவங்களுக்கு மட்டுமல்ல துன்ப அனுபவங்களுக்கும் இறைவனுக்கு நன்றி சொல்லுவோம்.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி இன்னும் எவ்வளவு காலம் நீடிக்கப்போகிறது என்ற பயம் முடிவில்லாததாகவே உள்ளது. இறை வேண்டுதல் வழியே தான் இதுபோன்ற எல்லாப் பிரச்சினைகளுக்கும்தீர்வுகாணமுடியும். இறைவேண்டுதல் ஆண்டான 2024ஆம் ஆண்டு முழுவதும் செபத்தில் நம்பிக்கை வைத்து இறைவேண்டுதலில் ஈடுபடும்படி அனைவருக்கும் அன்பு அழைப்பு விடுக்கிறோம். இறைவனின் அன்னையும் இறைமக்களின் அன்னையுமான தேவ அன்னை தாய்க்குரிய அன்போடு எம் அனைவரையும் இவ்வாண்டு முழுவதும் பாதுகாத்து வழி நடத்த வேண்டி இறையாசீர் மிக்க வாழ்த்துகளை தெரிவிக்கிறோம் - என்றுள்ளது. (அ-ஒ-இ)

## இந்து...

ரணில் விக்கிரமசிங்கவிடம் முன்வைக்க இந்து அமைப்புகள் தீர்மானித்துள்ளன.

இந்து அமைப்புகளின் ஏற்பாட்டில் வடமாகாணத்தில் சைவ அமைப்புகள் எதிர்நோக்கும் சமயரீதியான பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் நல்லை ஆதீன திருஞானசம்பந்தர் மண்டபத்தில் சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் தலைமையில் இடம்பெற்றது.

இந்து அமைப்புகளின் கோரிக்கைகள் இதன்போது அடையாளம் காணப்பட்டு அவை அரசமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டும் எனவும், ஜனாதிபதியின் யாழ்ப்பாணப் பயணத்தின்போது அவற்றைக் கையளிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

பல்லாயிரம் ஆண்டுகாலமாக வரலாறு கொண்ட இலங்கையின் இந்து சமயத்துக்கு அரசமைப்பில் முன்னுரிமை அளிக்கவேண்டும்.

மதங்களின் மதமாற்ற முயற்சியைத் தடுப்பதற்கு நாடாளுமன்றத்தில் மதமாற்ற தடைச்சட்டத்தை இயற்றவேண்டும்.

இந்துமதங்களும், பௌத்தமதங்களுக்கும் தெய்வமாகப் போற்றப்படும் பசுக்களை எவரும் கொல்லக்கூடாது. பசுவதை தடைச்சட்டத்தை இயற்றவேண்டும்.

ஆரம்பமுன்பள்ளி பருவத்திலுள்ள சிறார்களுக்கு பசுவைப் பாதிப்பது பற்றிய நூல்கள் அறிமுகம் செய்யவேண்டும் என்பனவே ஜனாதிபதியிடம் கோரிக்கைகளாக முன்வைக்கப்படவுள்ளன. (அ-ஒ-20-66)

## வடக்கில்...

அவர்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. அவர்கள் விரைவில் கைது செய்யப்படுவார்கள். எதிர்வரும் 6 மாதங்களுக்குள் வடக்கில் போதைப்பொருள் ஒழிக்கப்படும். அதேபோன்று ஏனைய குற்றச்செயல்களும் கட்டுக்குள் கொண்டு வரப்படும் என வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஹிந்த குணரத்ன தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் தற்போது மேற்கொள்ளப்படும் போதைப்பொருள் மற்றும் குற்றச் செயல்களுக்கு எதிரான விசேட நடவடிக்கை வடக்கு மாகாணத்திலும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் விற்பனை, போதைப்பொருள் நுகர்வு ஆகியவற்றில் ஈடுபடுவோர் கைது செய்யப்படுகின்றனர். அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. இந்த நடவடிக்கையால் வடக்கில் 90 சதவீதம் குற்றச் செயல்கள் சடுதியாகக் குறைந்துள்ளன.

குற்றச் செயல்களில் ஈடுபடும் மற்றும் போதைப்பொருள் வியாபாரத்தில் தொடர்புடையவர்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. அவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அவர்கள் விரைவில் கைது செய்யப்படுவார்கள்.

பதில் பொலிஸ்மா அதிபர் மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஆகியோர் எதிர்வரும் ஜூன் மாதத்துக்குள் நாடளாவிய ரீதியில் போதைப்பொருள் செயற்பாடுகளை ஒழிப்பதை இலக்காகக் கொண்டுள்ளனர். அதற்குரிய நடவடிக்கைகள் வடக்கிலும் முன்னெடுக்கப்படுகின்றது.

போதைப்பொருள் விற்பனை செய்வோர் தொடர்பாக 071 859 8834 (யாழ்ப்பாணம்), 071 859 8835 (காங்கேசன்துறை), 071 859 8836 (வவுனியா), 071 859 8837 (மன்னார்), 071 859 8838 (கிளிநொச்சி), 071 859 8839 (முல்லைத்தீவு) என்ற இலக்கங்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும். இந்த இலக்கங்களுக்கு அழைப்பெடுப்பவர்களின் விவரங்கள் தெரியவராது. அதனால் அச்சமின்றித் தகவல்களை வழங்கமுடியும் என்றும் அவர் தெரிவித்தார். இதனைவிட வடமாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலயத்திலும் நேரடியாக முறையிடலாம் என்றும் அவர் தெரிவித்தார். (அ-ஒ-26)

## 4 பிரதேச...

யாளர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என வடக்கு மாகாண பிரதம செயலர் சமன் பந்துலசேன தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்குத் தொற்றாளர்கள் அதிகம் இனம்காணப்பட்ட யாழ்ப்பாணம், கோப்பாய், நல்லூர், சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் விசேட கூட்டம் நேற்று அந்தந்த பிரதேச செயலகங்களில் நடைபெற்றன. இந்தக் கூட்டத்திலேயே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

'டெங்கு பரவுவதற்கு ஏதுவான சூழல் காணப்படும் காணிகளின் உரிமையாளர்களுக்கு உரிய அறிவித்தல் வழங்கி அதன் பின்னரும் நடவடிக்கை எடுக்காவிடின் நீதிமன்றத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும்' என பிரதம செயலர் குறிப்பிட்டார். (அ-ஒ-125)

## குடும்பத்தகராறு...

சுறுத்தியுள்ளார் எனவும், அது தொடர்பில் பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கம் ஊடாக முறையிடப்பட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் நேற்று மாலை மனைவியிருந்த வீட்டுக்குச் சென்று அங்கிருந்த பொருள்களை அடித்து நொருக்கியதுடன் வீட்டுக்கும் தீவைத்துள்ளார். இதையடுத்து அவர் ஒட்டுசுட்டான் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-ஒ-110)

## மயங்கியவர்...

நிலையில் திடீரென மயங்கி சரிந்து உயிரிழந்துள்ளார்.

குமாரவளவு, வியாபாரிமூலை, பருத்தித்துறையைச் சேர்ந்த ஸ்ரீஹரன் அருந்ததி (வயது-66) என்பவரே இவ்வாறு மயங்கி சரிந்து உயிரிழந்துள்ளார்.

உணவு உட்கொள்ளாமை மற்றும் வாந்தி காரணமாக கடந்த வெள்ளிக்கிழமை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு விடுதி கடமையில் இருந்த தாதியுடன் உரையாடிக் கொண்டிருந்த போது திடீரென மயங்கி சரிந்துள்ளார்.

இதையடுத்து உடனடியாக அவசர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்ட போதும் அவர் உயிரிழந்துள்ளார். உயிரிழப்புத் தொடர்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டார். (அ-ஒ-100)

## பெற்றோல்...

எரிபொருள் விநியோகிக்கப்பட்ட ஒரு சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசையில் நின்றதைக் காணக் கூடியதாக இருந்தது. வடக்கில் சகல எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் போதியளவு எரிபொருள் கைவசம் இருந்தபோதும், விலை அதிகரிப்புக்காக எரிபொருள் பதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-26-66)

## மரண அறிவித்தல்



### திருமதி மகேஸ்வரி நித்தியானந்தன்

நீர்கொழும்பைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் பொற்பதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி நித்தியானந்தன் அவர்கள் நேற்று (31.12.2023) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் நித்தியானந்தன் JP அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நடராஜா - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்ப மகளும் ஜனகன் (முன்னாள் முகாமையாளர் லேக் ஹவுஸ் - யாழ் கிளை), பார்த்திபன் (முகாமைத்துவ கணக்காளர் UK) ஆகியோரின் அன்புத் தாயும், வனிஷா, சௌம்யா ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான Dr.சிவராஜா, திருமதி சிவனேஸ்வரி, மற்றும் விக்னராஜா (UK) ஸ்ரீஸ்கந்தராஜா (நோர்வே) செல்வராஜா (UK) ஆகியோரின் அன்பு சகோதரியும், சாரங்கன், சாம்பவி, ஓவியா, அர்ச்சனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.01.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அவரது இல்லத்தில நடைபெற்று, பிற்பகல் 01.00 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**15/9, பொற்பதி வீதி,**
**கொக்குவில்**

(CS 27531) S-1

தகவல்:
**ஜனகன், பார்த்திபன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## மருத்துவமனை முன்பாக இளைஞன் மீது வாள்வெட்டு

பருத்தித்துறை, ஜன. 1

பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு முன்பாக உள்ள உணவகத்துக்குள் புகுந்த சிலரால் மேற்கொள்ளப்பட்ட வாள் வெட்டு தாக்குதலில் துன்னாலை வடக்கைச் சேர்ந்த யோகராசா திலக்சன் (வயது-21) என்ற இளைஞர் படுகாயமடைந்துள்ளார்.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு முன்பாக உள்ள உணவகத்தில் வேலை செய்யும் இளைஞர் ஒருவர் மீதே நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு வாள் வெட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரண்டு கைகளிலும் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஒ-100)



## வீட்டின் மீது

### பெற்றோல் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், ஜன. 1

புத்தூர் கிழக்கிலுள்ள வீடொன்றின் மீது நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 11.30 மணிக்கு பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வீட்டிலுள்ளவர்கள் உறங்கிக் கொண்டிருந்தவேளை மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாதோர் வீட்டின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதலை நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர். இதில் வீட்டின் முன்பகுதி சேதம் அடைந்துள்ளது. (அ-ஒ-20)

# தென்னக்கோனுக்கு எதிராக நான்கு மனுக்கள்!



கொழும்பு, ஜன. 1

பதில் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ள தேசபந்து தென்னக்கோனின் நியமனத்தை தடை செய்யுமாறு உயர்நீதிமன்றத்தில் நான்கு அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் பாதிக்கப்பட்டோர், அரகலய போராளி ஒருவர், உண்மைக்கும் நீதிக்குமான சட்டத்தரணிகள் சங்கத்தினர் ஆகியன இந்த மனுக்களை தாக்கல் செய்துள்ளனர். (அ-ஒ-6)

## குடும்பப் பெண் மீது கணவர் கத்திக்குத்து

முல்லைத்தீவு, ஜன. 1

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு முன்பாக நின்ற குடும்பப் பெண் மீது அவரது கணவர் கத்திக்குத்து தாக்குதல் நடத்தியதில் அவர் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதான மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். இந்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

குடும்ப முரண்பாட்டால் கணவன், மனைவி இருவரும் பிரிந்து வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை முன்பாக மனைவி நின்றிருந்த வேளை அங்கு வந்த கணவன், அவரது கழுத்தில் கத்தியால் குத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மனைவி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் கணவன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-ஒ-19)



பிரமனின் ஆணவத்தை அகற்றி, அருளொளி பரப்பிய சிவனின் திருவிளையாடல் நல்லூர் சிவன் கோவிலில் பிரமசிரச்சேத உற்சவம் அண்மையில் நடை பெற்றது. (ரி)

**Clerk தேவை**

கட்டைப்பிராயில் உள்ள
கல்வி நிறுவனம் ஒன்றுக்கு Clerk (பெண்)
தேவை.

**077 193 0298**

**சிறிராம் ஜுவல்லர்ஸ்**

இல.158, 193 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**ஆண்டு இறுதியை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத் தள்ளுபடி**



*செய்கூலி சேதாரமின்றி ஆபரணங்கள் வழங்கப்படும்.
*அனைத்து விதமான தங்க ஆபரணங்களும் வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க 15.01.2024 வரையும் விசேட விலைக்கழிவில் வழங்கப்படும்.

**ஒருமுறை வந்து பாருங்கள் ஒத்துக்கொள்வீர்கள்.**

*அனைத்து ஆபரணங்களுக்கும் தரச்சான்றிதழ்கள் வழங்கப்படும்.
*தங்கத்தின் அன்றைய நாள் விலை நிலவரத்தின்படி ஆபரணங்களின் விலைகள் நிர்ணயிக்கப்படும்.

தொடர்புக்கு: 077 165 1729, 077 773 0567, 021 222 8334

# மரண அறிவித்தல்

மலர்வு
26 . 01 . 1944



உதிர்வு
30 . 12 . 2023

## தருமலிங்கம் நாகபூசணி அம்மா (பூசணி)

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வதிவிடமாகவும் கொண்ட நாகபூசணி அம்மா தருமலிங்கம் அவர்கள் 30.12.2023 சனிக்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தருமலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, சின்னத்தங்கம், கந்தசாமி, தெய்வானைப்பிள்ளை மற்றும் விசாலாட்சி, மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சிங்கராஜா, குணரத்தினம்மா, சுந்தரமூர்த்தி மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், மோகனதாஸ் (சுவிஸ்), மோகனேஸ்வரி, மோகனகுமார் (சுவிஸ்), சுதர்சனா (பிரான்ஸ்), ஆதித்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சாந்தி, அன்பழகன், ரஞ்சினி, உதயபாணு, காயத்திரி ஆகியோரின் பாசமிகு மாமியும், அகின்ஷன், அகின்ஷா, அகியுகன், விறோஜா, சாருக்ஷன், கஜீவன், சுவியா, நிமோறாஜ், அபின்சன், நிபின்சன், அக்ஷயன், துஷாரா, அபிசயன், டிவ்வியன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஜீவேஷ், ஜஷ்வின், தேஜானி, நிகிதா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.01.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இராமகிருஷ்ணா வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவிலில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக கோண்டாவில் கலைவாணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
**076 623 8072**
**076 390 9688**

**இராமகிருஷ்ணா வீதி,**
**கோண்டாவில் கிழக்கு,**
**கோண்டாவில்.**

(CS 27530) S-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.01. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.